## முன்னுரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின பெயரால் ஆரம்பம் செய்கின்றேன். இறுதித்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் வழிநடந்த அனைத்து மக்கள் மீது இறையருள் என்றென்றும் உண்டாகட்டுமாக ஆமீன்.

இஸ்லாம் பூரணத்துவம் பெற்ற இறை மார்க்கமாகும். அதனால் அது நீதி, ஒழுங்கு, சட்டம் போன்ற பண்புகளைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றது. அதனால், மனிதர்கள் சட்டங்களைக் கற்றுத்தர வேண்டும் என்ற நிலையில் அது மாற்றார் தயவில் தங்கிநிற்கவில்லை.

இஸ்லாமிய வாழ்வியல் நெறியானது, அல்லாஹ்வால் வகுத்தளிக்கப்பட்ட வழிகாட்டல்களை நிரப்பமாகப் பெற்ற மார்க்கம் என்பதால் உலகம் முடியும் வரை நிலையான, மாறாத சட்டங்களை அது தன்னகத்தே கொண்டுள்ளது.

காலத்தால் அழிந்து போகும் மனித சிந்தனைகளால் உதிக்கின்ற சட்டங்களை ஏற்பது இறைவழிகாட்டலுக்குச் செய்கின்ற மிகப்பெரும் அநீதியும், உலகில் அமைதியின்மை உருவாகக் காணரமும் என்பதைக் காரணமாகக் கொண்டு குறைவும், விமர்சனமும் நிறைந்த மனித சிந்தைகளை ஏற்க அடியோடு மறுக்கின்றது.

இஸ்லாம் சர்வதேச உறவுகள் பற்றிய கோட்பாட்டை சர்வதேச உறவுகள் பற்றிய கோட்பாடுகளை மேற்கத்தைய அறிஞர்கள் முன்வைப்பதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் அது தெளிவாகவும், மனித இனத்திற்கு பொருத்தமானதாகவும் முன்வைத்திருக்கின்றது என்பதை நிரூபிக்கும் முகமாக **இஸ்லாமிய சர்வதேச கோட்பாடு பற்றி விமர்சனரீதியாக ஆராய்க** என்ற இந்த தலைப்பின் ஊடாக பின்வரும் முக்கிய அம்சங்கள் பற்றி பேசப்படவிருக்கின்றன.

*1- சர்வதேச உறவுகள் என்பதற்கான வரைவிலக்கணம்,*
*2- சர்வேதச உறவுகள் பற்றிய தேவையும், அவசியமும்.*
*3- இஸ்லாத்தில் சர்வதேச உறவுகள் பற்றிய வரலாற்றுச் சுருக்கம்.*
*4- இஸ்லாமிய சர்வதேசக்கோட்பாடு காலத்தால் முந்தியது.*
*5- இஸ்லாமிய சர்வதேசக்கோட்பாட்டின் சிறப்பம்சங்கள்.*
*_ வஹியின் மீது அமையப் பெற்றுள்ளமை*
*_ இறைமைத்தன்மை வாய்ந்தது- ரப்பானிய்யா- குறைபாடற்றது*
*_ எல்லாக்காலத்திற்கும் பொருத்தமானது*
*6- இஸ்லாத்தில் போரியல் பண்பாடுகள்*
*_ போர் எதற்காக செய்யப்படுகின்றது*
*_ கைதிகள் பரிமாற்றம்*
*_ பொதுமன்னிப்பு*
*_ போர்க்கைதிகளை நடத்தும் முறை.*
*_ சிறுபான்மை மதத்தவரான திம்மிக்களும் உரிமைகளும்*
*7- ஒப்பதந்தங்கள், உடன்படிக்கைகளைப் பேணுவதில் இஸ்லாம் காட்டும் அக்கறை.*
*8- முஹம்மத் பின் ஹஸன் அஷ்ஷைபானி வாழ்க்கை குறிப்பு.*
*9- டாக்டர்: முஹம்மத் ஹமீதல்லாஹ் வாழ்க்கை குறிப்பு.*
*முடிவுரை*
*உஸாத்துணைகள்*

# சர்வதேச உறவுகள் என்பதற்கான வரைவிலக்கணம்

சர்வதேச உறவுகள் பற்றி வரைவிலக்கணம் தருவதில் பல கருத்துக்கள் காணப்படுகின்றன.

நாடுகளுக்கிடையில் தொடர்பாடல்களை கட்டி எழுப்புவதற்கான சட்டவியல்கள் தொடர்பான விதிகளைக் கொண்ட ஒரு வழிமுறைக் கொத்து என்பார்கள்.

ஆட்சியில் இருக்கும் வர்க்கத்தின் -அரசின்- நோக்கத்தை தெரிவுபடுத்துகின்ற ஒரு நாட்டிற்கு எதிரான போரின் போதும், ஒத்திழைப்பின் போதும் அவைகளுக்கு இடையில் ஒழுங்கு செய்யப்படுகின்ற தொடர்பாடல் தொடர்பான அம்சங்களை சர்வதேச சட்டம் எனப்படும் என்கிறார் சோவியத் அரசியல் ஆய்வாளரான பெத்ஷன்ஸ்கீ என்பவர். (1)

**مجموعة القواعد القانونية الوضعية التي تحكم العلاقات بين أشخاص المجتمع الدولي ، أو الجماعة الدولية**

சர்வதேச சமூகத்திலுள்ள மனிதர்கள், அல்லது சர்வதேச மக்கள் மத்தியில் தொடர்பாடல்களை உண்டுபண்ணக் கூடிய மனித சட்டங்கள் தொடர்பான கூட்டுவிதிகள் என வர்ணிக்கின்றார் முஹம்மத் யூசுப் அல்வான் என்பவர். (2)

சர்வதேச உறவுகள் பற்றிய ஆய்வாளர்களின் கூற்றுப்படி இவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

فالقانون الدولي هو : مجموعة القواعد التي تنظم العلاقة بين مجموعة من الدول في الحرب وفي السلم ، بين مجموعة من الدول المستقلة المكتملة السيادة التي تترابط عرفاً أو اتفاقاً على قدم المساواة ، وعلى أساس التبادل المطلق ، وهو يقوم على مبدأ الإقليمية ، فينبسط سلطان الدولة بحسب الأصل على أرضها وما فوقها وما تحتها دون أن يمتد إلى ما وراء ذلك

போர், மற்றும் சமாதான காலங்களில் பல நாடுகளுக்கிடையில் உறவுகளை ஒழுங்கமைக்கின்ற சட்டவிதிகளைக் கொண்ட ஒரு நடைமுறை. அவை, பூரண தலைமைத்துவம், மற்றும் தனியான இறையாண்மை, நிலப்பரப்பு, அரசைக் கொண்ட நாடுகளுக்கிடையில் பொதுவான உறவுப்பரிமாற்றம், சமத்துவ அடிப்படையிலான உடன்படிக்கையைப் பேணும் வகையில் அமைந்ததாகும்.

இஸ்லாம் தேசம் கடந்த சித்தாந்தத்தையும், உறவையும் உள்ளடக்கி இருக்கின்ற காரணத்தால் இதை இஸ்லாமிய சர்வதேசக் கோட்பாட்டாளர்கள் அங்கீகரிக்கவில்லை நாம் கவனிக்க வேண்டும்.

இஸ்லாமிய சர்வதேச உறவுகள் பற்றி விபரிக்கின்ற கலாநிதி ஹமீதுல்லாஹ் என்பவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

இந்த உறவை ஒருநாட்டின் குறிப்பானதும், பொதுவானதுமான சர்வதேச உறவுகள் என்றும் பிரித்து நோக்குவார்கள். பொதுவானதில் இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படுகின்ற உறவுகள் பற்றி உள்ளடக்கப்பட்டிருக்கும். குறிப்பானதில் குறித்த நாடொன்று அது தொடர்பான விஷேடமான சில அம்சங்களை பிற நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதில்லை என்ற நிலைப்பாடு தெளிவாக கூறப்பட்டிருக்கும்.

-------------------------

1- العلاقات الدولية في الفقه الإسلامي ص 12.

2- http://www.neelwafurat.com/itempage.aspx?id=lbb135582-95650&search=books

هو مجموعة الأحكام التي تنظم ارتباط الدولة بالدول الأخرى في أوقات السلم والحرب (1)

போர், மற்றும் சமாதான காலங்களில் மற்ற நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடிய ஒரு நாட்டின் ஒட்டுமொத்மதான சட்டவிதிகளைக்குறிக்க சர்வதேச பொதுச் சட்டம் என வரையறை செயப்படுகின்றது (1) இஸ்லாதின் பார்வையில் சர்வதேச உறவு என்பது : இறையியல் கோட்பாட்டைத் தழுவியதாகக் கொள்ளப்படும் அதேவேளை, இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழ்கின்ற சிறுபாண்மை சமூகத்தின் உரிமைகள், போர், மற்றும் சமாதான காலங்களில் பிறநாடுகளுடன் கைச்சாத்திடப்படும் உடன்படிக்கைகளை நிறைவேற்றுவது பற்றியும் தெளிவாகக் கொண்டிருக்கும்.

அவை, இஸ்லாமிய வரையறைகளைத் தாண்டாத, இறைகோட்பாட்டிற்கு முரண்பாடில்லாத உறவைக் கொண்டதாக இருப்பதையே இஸ்லாம் சர்வதேச உறவுபற்றி கோட்பாட்டில் உள்ளடக்க விரும்புகின்றது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## இஸ்லாமிய சர்வதேசக்கோட்பாடு காலத்தால் முந்தியது.

சர்வதேச கோட்பாடுகள் பற்றி இஸ்லாம் எதையும் பேசவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு மேற்கத்திவாதிகளால் முன்வைக்கப்பட்டலும் அது ஆய்வின் குறைபாட்டையே காட்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

சர்வதேச உறவுகளின் வயாது என்பதற்கு முன்னூறு வருடம்தான் என்பதை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் இஸ்லாமிய சர்வதேசப்பார்வை என்பது 1500 ஆண்டுகளையும் தாண்டியது. இன்னும் சொல்லப்போனால் மனிதன் உலகில் படைக்கப்பட்டது முதலே அவனுக்குரிய வழிமுறைகளும் காண்பிக்கப்பட்டுவிட்டது என்ற அல்குர்ஆனின் கூற்றுக்கு அமைவாக அது காலத்தால் முந்தியது என்பதை மறுக்க முடியாது.

அரபி மொழியில் **القانون الدولي الإسلامي** என்றழைக்கப்படும் சொல்லாடலில் கானூன் என்ற சொற்பிரயோகம் முஸ்லிம் அறிஞர்களால் உபயோகத்தில் இருந்த போது அது சர்வதேச உறவுகள் என்ற கட்டமைப்பினுள் ஷரீஆத்துறை அறிஞர்களால் ஆரம்ப காலங்களில் உபயோகிக்கப்படவில்லை. இது நவீன காலத்தில் உபயோகிக்கப்படுகின்ற ஒரு சொற்பிரயோகமாகும்.

இது இஸ்லாமிய ஷரீஆவின் ஒரு அம்சமாக நபிகள் நாயகத்தின் காலம்முதல் பேசப்பட்டிருக்கின்றது. அஸ்ஸியர் என்ற சொற்பிரயோகத்தை இமாம் அபூஹனீ∴பா (ரஹ்) அவர்களால் முதலாவதாக உபயோகிகப்பட்டதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டபோதிலும், இஸ்லாமிய சர்வதேச உறவுகளின் தந்தை என வர்ணிக்கப்டுகின்ற முஹம்மத் பின் ஹஸன் அஷ்ஷைபானி என்ற அவர்களின் மாணவரே இது பற்றி தெளிவாகப் பேசியவர் என்பது அறியக்கிடைக்கின்றது. அவர், அஸ்ஸியர் அல்கபீர் என்ற நூலில் இது பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். இவர் ஹிஜ்ரி 132-:187 காலப்பகுதி அறிஞர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். (1)

**ஸியர்** என்ற வார்த்தையின் மூலம் போர்கள், அவை தொடர்பான சட்டங்கள், போரில் கிடைக்கப்படும் பொருள்கள், மதம்மாறுதல், பாதுகாப்புவழங்குதல், ஆள்வரி, கைதிகள் பரிமாற்றம் போன்ற அம்சங்கள் உள்ளடங்கப்பட்டிருப்பதன் மூலம் சர்வதேச உறவின் முன்னோடி முயற்சி என்பதை மறுக்க முடியாது.

---

1- (( الإسلام والدستور – (1 / 14)) **توفيق بن عبد العزيز السديري**

2- **2– نقلا من مجلة البيان (12 / 36) من مقالة عثمان جمعة ضميرية " لإمام محمد بن الحسن الشيباني وكتابه " السِّيَرُ الكبير"**

## *சர்வேதச உறவுகள் பற்றிய அவசியமும் தேவையும்.*

மனிதன் சமூகப்பிரயாணியாவான். எனவே அவன், பிற சமூகங்களுடன் கலந்து வாழும் தேவையுடையவனாக இருக்கின்றான். பிறருடன் தொடர்பாடல்களை அவன் ஏற்படுத்திக் கொள்கின்ற போது அவன் பல சமூகவியல் தொடர்பான பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது.

தனித்த வாழ முடியாது என்பதே யதார்த்தம். ஆகவே சேர்ந்து வாழ வேண்டும். அதனால் பிற சமூகம் பாதிப்படுவதை தவிர்ப்பதற்குரிய சகல நடவடிக்கைகளும் இன்றியமையாததாகக் கொள்ளப்படுகின்றது. சமூகத்துடான தொடர்பைத் தொடர்ந்தும் பேணிட சட்டம், ஒழுங்குகள் பெரும் உதவியாக இருக்கின்றன.

இதற்கு உதாரணமாக நபித்துவக் காலத்திற்கு முன்னர் வாழ்ந்த மக்காவாழ் மக்களால் நிறுவப்பட்ட 'ஹில்புல் ஃபுழூல்' (1) என்ற அமைப்பைக் குறிப்பிட்டுக்காட்ட முடியும். முஹம்மத் நபி (ஸல்) அவர்களும் இதில் ஒரு அங்கத்தவராக இருந்துள்ளார்கள்.

இது பிற சமூகத்தினருடனான உறவைக் கொண்ட ஆரம்பகால அமைப்பாகும். இதனால் மனிதர்கள் மத்தியில் ஏற்படுகின்ற சர்ச்சரைகளுக்கு தீர்வுகள் பெற்றுத் தரப்பட்டன. அறியாமைக்கால மக்கள் மத்தியில் மூழுகின்ற போர்கள் இந்த சபையின் ஊடாக சமாதனாத் தீர்வை எட்டி இருக்கின்றன. இதை ஒத்ததுதான் ஐக்கிய நாடுகள் சபை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். (2)

1914ம் ஆண்டு நடந்தேறிய முதலாவது, இரண்டாவது உலகமகாயுத்தத்தின் பின்னணியில் நாடுகளுக்கிடையலான பரஸ்பர உறவுகள் பேணப்படுதல், பாதுகாப்பு, சிவிலியன்களின் பாதுகாப்பு, சமாதானசூழலை உருவாக்குதல், யுத்தம் நிகழ்வழ்வதைத் தவிர்த்தல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக சமாதானத்தை நோக்காகக் கொண்ட எண்ணக்கருவின் அடிப்படையில் பலரது கருத்துக் கூறப்பட்டது. அதன் பயனாக, 1941-ம் ஆண்டு ஜுன் மாதம் 12-ம் திகதி ஐக்கிய இராச்சியத்தில் (லண்டனில்) இந்த சிந்தனை பற்றி முன்மொழியப்பட்டது.

1941ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஐக்கிய நாடுகள் என்ற பெயரைத் தாங்கியதாக சர்வதேசத ஆதரவைப் பெற்றுள்ளதாக அமெரிக்கா பகிரங்க அறிக்கை வெளியிட்டது. அப்போது அதில் 26 நாடுகள் கைச்சாத்திட்டன. வருடந்தோறும் வருகின்ற ஒக்டோபர் 24-ம் திகதி ஐக்கிய நாடுகள் தினம் அனுஷ்டிப்பது என பொதுச்சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் வபையின் உருவாக்கம் உலகில் ஓடிய மனித இரத்த ஆறுகளுக்கு முடிவு கட்டுதல் என்ற உயர்ந்த இலக்காக இருக்கின்ற என்றால் அதைவிடப் பன்மடங்கு மனித சமூகத்திற்கு பயனுள்ள ஆக்கபூர்மான பல திட்டங்களை சமாதானம், இம்மை மறுமை பற்றிப் பேசுகின்ற இஸ்லாமிய மார்க்கத்தில் அது பற்றிய தெளிவு இருக்கின்றது என்பதே நமது நம்பிக்கையாகும். (3)

---------------

1- **الكامل في التاريخ – ذكر حلف الفضول (ج 1 / ص 251 )**

2- الحضارة الإسلامية بين أصالة الماضي وآمال المستقبل - (8 / 127)

3- مجلة مجمع الفقه الإسلامي - بتصرف يسير- (7 / 1795)

## சர்வதேச உறவுகள் பற்றிய வரலாற்றுச் சுருக்கம்.

*ஒருமனிதன் மற்றமனிதன் மீதும், ஒரு நாடு மற்ற நாட்டின் மீதும் தங்கி, தாங்கி வாழ்தல் என்ற உலக இறை நியதி என்பது உறவுகள் இன்றி சமூகங்கள் வாழ முடியாது என்பதை நிதர்சனமான உண்மையை உலகுக்கு தெளிவுபடுத்துகின்றது.*

*மனிதர்களே! உங்களை ஒரு ஆண், பெண்ணில் இருந்து நாம் படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிமுகமாகிக் கொள்வதற்காக உங்களை பல கோத்திரங்களாக கிளைகளாக மாற்றி இருக்கின்றோம். (1)*

இந்த நியதியை மனித சமூகம் மறுக்கமுடியாது. மனிதர்கள் ஆரம்பம்முதல் பலகோத்திரங்களாக, கிளைகளாக இருந்த போதே தமக்குள் தொடர்பாடல்களை உருவாக்கி வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது ஆய்வாளர்களின் முடிவாகும். மேற்கத்தேய ஆய்வாரன மோர்டிஸ்கியோ என்பவர் மனிதர்களின் உறவுகள் பற்றிக் குறிப்பிடும் போது:

قال مونتسكيو :ما من أمة من الأمم إلا ولها في حقوق الدول نظام ، حتى قبائل (إركوا) الذين يأكلون أسراهم لهم نظام من هذا القبيل ؛ فإنهم يرسلون رسله ويستقبلون رسل غيرهم ويعرفون أحكام السلم والحرب ، ولكن من سوء أمرهم أن نظام حقوقهم غير مبني على الصحيح من الأصول

*உலகில் வாழ்ந்த அனைத்து சமூகங்களும் தமது நாடுகளின் சட்ட ஒழுங்குகளுடன்தான் வாழ்ந்திருக்கின்றன. ஏன்! தமது கைதிகளை உண்ணும் பழக்கம் உடைய* ***'இர்கவா' எனும்*** *அமைப்பினர் கூட தமது தூதர்களை போர், மற்றும் சாமாதான காலங்களில் பிறநாடுகளுக்கு அனுப்பிவைப்போராகவும், பிறநாட்டு தூதுவர்களை வரவேற்போராகவும் இருந்தார்கள். அவர்கள், சமாதானம், போர் பற்றி அறிந்தும் வைத்திருந்தனர். இருந்தாலும், அவர்களது உரிமைகள் தொடர்பான சாசனம் சரியான அடிப்படைகள் மீது ஒழுங்கமைக்கப்பட்டதாக இருக்கவில்லை என்பது துரதிஷ்டம்தான் என்கிறார் (2) (3)*

முஸ்லிம்கள் இந்த தொடர்பாடலை இஸ்லாமிய தூதை எற்றிவைப்பதற்கான ஆயுமாக பயன்படுத்தினார்கள் என்பதை இஸ்லாமிய வரலாறு சுட்டிக்காட்டுகின்றது.

***சீனர்கள்.*** கி.மு.2353ற்கு முன்னர் சீன நாட்டு சக்கரவர்த்தி **யாவோ** அண்டை நாட்டு தூதுக்குழுக்களை வரவேற்பவனாக இருந்தான்.

**கிரேக்கம்:** தாமே நாகரீக, பண்பாட்டின் உயர் சமூகத்தவர் என்ற எண்ணத்தில் வாழ்ந்த கிரேக்கர்கள், பிறநாட்டவர்கள் பண்பாடற்றவர்கள். மிருகப்பண்பாடுள்ளவர்கள். எனவே அவர்களுக்கு போர்மூலம்தான் பதில் சொல்ல வேண்டும் என்ற மனோ நிலையில் காணப்பட்டார்கள்.

போர் முடிந்து சமாதானம் ஏற்படும் போது தமது ராஜதந்திரிகளை அனுப்பி இருநாடுகளுக்குமிடையில் பரஸ்பர உறவைப் புதிப்பித்துக் கொள்வார்கள்.

***ரோமாபுரி.*** **பொதுவாக தூதர்களை பிறநாடுகளுக்கு அனுப்பும் வழக்கம் இங்கு காணப்பட்டது.**

----------------

*அல்ஹுஜ்ராத்: வசனம்: 13)* –1

مجلة البيان – (86 / 97 ) نقلا عن الأستاذ عثمان جمعة في كتابه منهج الإسلام في السلم والحرب . –2

العلاقات الدولية في الفقه الإسلامي ص 69-79 –3

***ஐரோப்பா.*** மத்திய கால ஐரோப்பா ஆரம்ப கால ஐரோப்பா விட சற்று வேறுபட்டுக்காணப்பட்டது. அது வீழ்ச்சி, சமூகப்பின்னடைவு காலம் என வர்ணிக்கப்படுகின்றது. இங்கு பிரபுக்கள் சபைதான் சமாதானத்தையும், போரையும், உடன்படிக்கைகளையும் தீர்மானிக்கக் கூடியதாக இருந்தது.

செய்யித் அப்துல்லாஹ் ஹஸன் என்பவர் மனித சட்டங்களின் உருவாக்கம் பற்றிக் குறிப்பிடுகின்ற போது அது பிரான்ஸ் நாட்டின் சட்டமாக இருந்து வந்துள்ளது. பிற்பட்டகாலத்தில் ஒவ்வொரு நாடும் தனது தேவைக்கும். விளக்கத்திற்குமாக அவற்றில் மாற்றங்களைக் கொண்டுவந்தன. அவர் மேலும் குறிப்பிடுகின்ற போது:

பிரான்ஸ் நாட்டின் சட்டம் பல அடிப்படைகளின் கலவயையாக விளங்கியதாகவும், அதில் மாலிக்கி மத்ஹபும் ஒன்றும் என்றும் 1366- 1937- வரை இருந்து வந்துள்ளதாக குறிப்பிடுகின்றார். அவர் சட்டங்கள் நடைமுறையில் இருந்த பற்றி விளக்குகின்ற பொது பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

1- **ரோமச் சட்டம்.** இது தென்பிரான்ஸில் கி.பி. 1785 வரை நடைமுறையில் இருந்தது.

2- **ஜுர்மானியச் சட்டம்:** இது வட ஆபிரிக்காவில் நடைமுறையில் இருந்து வந்தது.

3- **கத்தோலிக்கத் திருச்சபை சட்டம்:** இது திருமணம், தலாக்- மணவிலக்கு- போன்ற நடைமுறைகளைட தொடர்பானதாக இருந்துள்ளது.

4- **பொது உடமைச்சட்டம்:** இது 14-15-16 வது லுவைஸ் என்ற மன்னனின் கட்டளைகள் படி அமைந்திருந்த

5- புரட்சிச்சட்டம் பின்னர் இவை அனைத்தும் ஒரு சட்டமாக கி.பி.1804ல் ஒன்றிணைக்கபட்டது. இதுதான் 1926-ல் எகிப்து நாட்டின் நடைமுறையில் இருந்து வரும் சட்டமாகும்.

ரோமின் சட்டமானது கி.மு.50 ல் நுழைந்ததாகவும், ரோமர்கள் பிரான்ஸுக்கு எதிராக போர்தொடுத்ததைத் தொடர்ந்து பிரான்ஸில் கி.பி. 476 முதல் 986 வரை நடைமுறையில் இருந்து வந்ததாகவும், பின்னர் வழக்காட்டு முறைச்சட்டம் என்ற ஒன்று இருந்தாகவும், இவை அனைத்தும் பிரான்ஸியப் புரட்சியின் பின்னால் அனைத்து சட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே சட்டாக மாற்றப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (1)

எகிப்தில் கி.பி. 1856-ற்கு முற்பட்டகாலத்தில் இருந்தே இஸ்லாமிய சட்டம் ஆரம்பத்தில் இருந்து நடைமுறையில் இருந்து வந்தது. கி.பி.1876ல் இஸ்மாயீல்ஷா என்பரின் ஆட்சி காலத்தில் நோபார் பாஷா என்பவரால் ***மைசோமோன்றி*** என்பவரால் தயாரிக்கப்பட்ட பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகளின் கலவைச் சட்டம் பிரான்ஸின் அப்போதைய நீதிபதி ஒருவரால் நடைமுறைக்கு வந்தது. சிரியாவிலும் கி.பி.1949-ல் எகிப்திய பிரான்ஸியச்சட்டம் என்பது நடைமுறைக்கு வந்தது. இஸ்லாமிய சட்டத்தை இல்லாதொழித்து மனித சட்டங்களை நடைமுறைப்படுத்தும் வழிமுறையைக் காலணித்துவாதிகள் கடைப்பிடித்த அதே நேரம் அவற்றை அங்குமிங்குமாகப் பிச்சை எடுத்தே இயற்றியுள்ளனர். இஸ்லாமிய சட்டம் தெளிவானதும், மனித உயர்விற்கும் உரியதும் என்பதை இன்று உணரத் தொடங்கியும் பொருளியல், குற்றவியல் போன்ற சிலவற்றில் தவிர ஏனெய பகுதிகளில் அதை அங்கீகரிக்க அவர்களின் மனம் இன்னும் இடம்தரவில்லை.

---------------------------

1- مجلة الجامعة الإسلامية بالمدينة المنورة - (7 / 366)

2- مجلة الجامعة الإسلامية بالمدينة المنورة - (7 / 367)

## *ஜாஹிலிய்யக்கால அரபுக்கள்*

அறியாமைக்கால மக்கள் என்று வர்ணிக்கப்டும் இவர்களிடமும் இவ்வாறான நடைமுறை இல்லாமல் இல்லை. அவர்களிடம் **'ஹில்புல் புழூல்''** என்ற வியக்கத்தக்க வழிமுறை உலகுக்கோர் உதாரணமாகும். இது போன்றதொன்றாவே இரண்டாம் உலகப்போரின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை விளங்குகின்றது.

**அஸ்ட்ரியா நகரில் கி.பி 1815ல் கூட்டப்பட்ட மாநாடு நவீன ராஜதந்திர சர்வதேச உறவுக்கான அடித்தளமாகவும், பாரிய திருப்பமாகவும் கொள்ளப்படுவதாக விமர்சகர்கள் நோக்குகின்றார்கள்.** இந்த மாநாட்டில் சர்வதேச ராஜதந்திர உறவுகள் பற்றிப் விரவாகப் பேசப்பட்டதால் இது இவர்களுக்கு புதுமையானதாக இருக்கலாம்.

இது போன்ற மாநாடுகளுக்கு முன்பதாக இஸ்லாம் பிறநாட்டுத்துதுவர்களை, ராஜதந்திரிகளை எப்படி கொளரவிக்க வேண்டும் என்று வலியுறுத்திப் பேசியது மட்டுமின்றி, நடைமுறைப்படுத்தியும் இருக்கின்றது என்பதை நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

***வஹ்ஷி என்***பவர் நபிகள் நாயகத்தின் சிறிய தந்தைகளில் ஒருவரான ஹம்ஸா (ரழி) என்பவரை ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு மதீனாவிற்கு அண்மையில் இருந்த உஹுத் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் கொலை செய்துவிடுகின்றார். பிற்காலத்தில் மக்கள் பலர் இஸ்லாத்தில் இணைந்தனர், இவரும் தன்னை இஸ்லாத்தில் இணைத்துக் கொள்ள விரும்பினார். மக்கள் தாம் இஸ்லாத்தில் நுழைந்து கொள்வது பற்றி நபிகள் நாயகத்திடம் தூதர்களை அனுப்பினார்கள். இந்த வஹ்ஷியும் தூதுக்குழுவில் ஒருவராக இடம்பெறுகின்றார். ஹம்ஸாவிற்காக தான் முஹம்மத் நபியால் பழிவாங்கப்படுவோனா என்றும் அஞ்சினார். அப்போது மக்கள் அவரிடம் கூறிய வார்த்தையை அவர் இவ்வாறு பதிவு செய்கின்றார்.

فَقِيلَ لِي إِنَّهُ لَا يَهِيجُ الرُّسُلَ قَالَ فَخَرَجْتُ مَعَهُمْ حَتَّى قَدِمْتُ عَلَى رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَلَمَّا رَآنِي قَالَ آنْتَ وَحْشِيٌّ قُلْتُ نَعَمْ قَالَ أَنْتَ قَتَلْتَ حَمْزَةَ قُلْتُ قَدْ كَانَ مِنْ الْأَمْرِ مَا بَلَغَكَ قَالَ فَهَلْ تَسْتَطِيعُ أَنْ تُغَيِّبَ وَجْهَكَ عَنِّي .

அவர் தூதுவர்களாக செல்பவர்களை நிந்திக்கமாட்டார் என என்னிடம் கூறப்பட்டது. நானும் அந்த மக்களுடன் மதீனாவந்தேன். என்னை அவர் கண்டதும் நீ வஹ்ஷியா? நீதானே ஹமஸாவைக் கொலை செய்தவர்? எனக்கேட்டார்கள். நான், ***உங்களிடம் வரவேண்டியது வந்துவிட்டது நடக்கவேண்டியது நடந்து முடிந்துவிட்டது*** *என்றேன். உனது முகத்தை என்னை விட்டும் மறைத்துக் கொள்ளலாமா? (எனது சிறியதந்தையின் நினைவு என்னை மேலிடும்) என வேண்டிக்கொண்டார்கள்.* இதுதான் இறைத்தூதரின் சர்வதேச உறவின் முன்மாதிரிமிக்கி பகுதியாகும்.

---

1- صحيح البخاري – 3764 باب قتل حمزة بن عبد المطلب رضي الله عنه

சர்வதேச சட்டங்கள் பற்றிக் குறிப்பிடும் ஆய்வாளர்கள் ‘அவற்றின் வயது மூன்று நூற்றாண்டுகள்தாம் என்கிறார்கள். அதாவது கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் அரைப்பகுதியில்தான் அவை பிறந்தன எனக்குப்பிடுகின்றனர்.

இது கி.பி. 1648-ம் ஆண்டு வெஸ்ட்பாலியா என அழைக்கப்படும் உடன்படிக்கையை நடமுறைப்படுத்தி, ஐரோப்பியர் மத்தியில் காணப்பட்ட மதக்கலவரங்களை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கிலும் உருவாக்கப்பட்டிருந்ததாகவும், இதன் பின்னரே சர்வதேச அளவில் அது எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் சில அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

அவை, கத்தோலிக்க திருச்சபையின் மத நலன்களைப் பிரதிபலிக்கின்ற, பாதுகாக்கின்ற வகையில்தான் அமைந்திருந்தன என்பதை கத்தோலிக்க மதகுருக்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

இருந்தும் ஐரோப்பியர் பிற நாடுகளை காலணித்துவத்தின் கீழ் அடிமைப்படுத்திட திரைமறையில் இந்த உருவாக்கம் உதவின என்பதை காணமுடிகின்றது. பாப்பரசர் சிந்தனையில் இருந்து விடுபட்ட ஐரோப்பியர் கிரிஸ்தவர்கள் அல்லாதவர்களின் நிலங்களை தமதாக்கிக் கொள்ளவே இந்த சர்வதேச சட்டத்தை வரைய முற்பட்டனர்.

ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மறுமலர்ச்சி மாற்றங்களால் தலைமை அதிகாரம் உள்ள நாடுகள் சர்வதேச சட்டத்திற்கான நாடுகளாகக் கொள்ளப்படும் என்ற கருத்து முன்வைக்கபப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் சர்வதேச உறவுகளுக்கான பிரதிநிதிகளாக ஐரோப்பிய கிரிஸ்தவக் குடும்பம் என்ற ஒரு அமைப்பு தெரிவு செய்யப்பட்டது.

கி.பி.1815-ல் கூடப்பட்ட மாநாட்டின் கூட்டத்தில் கிரிஸ்தவர்கள் கடவுளின் நேரடித் தொடர்புடையவர்களாக இருக்கின்ற காரணத்தால் கிரிஸ்தவ மதத்தையே சர்வதேச உறவுகளுக்கான மையமாகக் கொள்ள வேண்டும் என மாநாட்டில் கலந்து கொண்டோர் தமக்குள் உறுதி மொழி வாங்கிக் கொண்டனர்.

பின்னர்***, நாகரீகம் என்ற நாடகம் முன்வைக்கப்பட்டது.*** அதாவது நாகரீகம் அடைந்த நாடுகள் சர்வதேச உறவுகளுக்கான அங்கீகாரம் பெற்றவையாகவும், அந்த ஐரோப்பிய சர்வதேச உறவுகளுக்கான அமைப்பில் அங்கம் வகிக்கும் உரிமை உடையதாகக் கொள்ளப்படும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. இதன் பின்னணியில் உஸ்மானியப் பேரசசை வீழ்த்துவது, முஸ்லிம் பிரதேசங்களைத் துண்டாவது, அதன் வழங்களைக் கொள்ளையடிப்பது, இறுதியில் பாரியதொரு சிலுவைப்போருக்கான முன்ஏற்பாடாக இருந்தது. (1)

இஸ்லாம் பலாத்காரமாக மக்கள் மத்தியில் திணிக்கப்பட்ட மார்க்கம் என கொக்கரிக்கும் இஸ்லாத்தின் எதிரிகள், இஸ்லாமிய சட்டம், அதன் சர்வதேச உறவுகள் பற்றி விமர்சிக்கின்றனர். ஆனால் சர்வதேச உறவுகள் என்ற பெயரில் மேற்கத்தியர் பிறநாடுகளின் வளங்களை உறிஞ்சி, கொள்ளையடிக்கவும், கிரிஸ்தவ மதத்தைப் பரப்பவுமே இவ்வாறான திட்டங்களை வகுத்தனர் என்பதை விமர்சிக்கத் தவறிவிடுகின்றனர். இது இஸ்லாத்தின் மீதுள்ள இவர்களின் காள்ப்புணர்ச்சியைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

-----------------------------------

*1*- مجلة البيان – (86 / 97 ) نقلا عن الأستاذ عثمان جمعة في كتابه منهج الإسلام في السلم والحرب .

## ஒப்பதந்தங்கள், உடன்படிக்கைகளைப் பேணுவதில் இஸ்லாம் காட்டும் அக்கறை

இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் நிகழ்ந்த உடன்படிக்கைகள் பற்றி ஆய்வு செய்கின்ற போது அணுப்பிரமாண அளவு கூட மீறப்பட்டதைக்காண முடியாது. இஸ்லாமிய அரசுடன் உடன்படிக்கை செய்து கொண்ட யூதர்களின் வரலாறு உடன்படிக்கைகளை முறித்து, திரைமறைவில் இருந்து இஸ்லாமிய எதிரிகளோடு கைகோர்த்து இஸ்லாத்தை அழிக்க முயற்சி செய்துள்ளனர். நபிகள் நாயகத்துடன் செய்து கொண்ட பல உடன்படிக்கைகளை அவர்கள் உயிருடன் வாழும் போதும், அவர்களின் மரணத்தின் பின்னாலும் முறித்துள்ளனர் என்பதை நாம் அறியமுடிகின்றது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும், மக்காவாழ் இறைநிராகரிப்பாளர்களுக்கும் இடையில் ஓர் ஹிஜ்ரி 6-ம் ஆண்டு ஹுதைபியா என்ற இடத்தில் வைத்து சமாதான உடன்படிக்கை நடைபெற்றது. அது முஸ்லிம்களுக்கு சாதகமானதாக இல்லாதிருந்தும் நிர்ப்பந்தத்தம் காரணமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை ஏற்றுக கொண்டார்கள். அந்த உடன்படிக்கையில் பின்வருமாறு அமைந்திருந்தது.

_ ***பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்*** *என ஆரம்பித்து எழுதாமல் பிஸ்மிஹீ தஆலா என்றே எழுத்தை ஆரம்பிக்க வேண்டும்.*

_ *அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மதுக்கும் மக்கா குரைஷியருக்கும் இடையில் நடை பெற்ற சமாதான உடன்படிக்கை என்றே இருக்கவேண்டும். அதற்கு மாற்றமாக, அல்லஹ்வின் தூதராகிய முஹம்மத் நபிக்கும், குரைஷியருக்கும் இடையில் உள்ள உடன்படிக்கை என்று எழுதப்படக்கூடாது.*

_ *இந்த ஆண்டு உம்ராக் கடமை நிறைவு செய்ய முடியாது. வருகின்ற வருடமே நிறைவேற்றலாம்.*

_ *அப்போது, வாள்கள் உறையினுள் இடப்பட நிலையில், நிராயுதபாணிகளாக மக்காவினுள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவர்.*

_ *மதீனா முஸ்லிம்கள் மக்காவில் மூன்று தினங்கள் மாத்திரம் தங்க அனுமதிக்கப்படுவர்.*

_ *மதீனாவில் இருந்து யாராவது மக்காவிற்கு வந்து சேர்ந்தாரல் திருப்பி அனுப்பப்படமாட்டார்.*

_ *மக்காவில் இருந்து யாராவது மதீனாவிற்கு வந்து சேர்ந்தால் அவரை உடன் திருப்பி அனுப்ப வேண்டும்.*
இதை முஸ்லிம்கள் பலர் எதிர்த்த நிலையில் இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள். அக்காலத்தில் மக்கா இறை நிராகரிப்பாளர்களின் கெடுபிடி, ஆக்கினையில் இருந்து பாதுகாப்பிற்காக மதீனாவை நோக்கி வருவோரும், இஸ்லாத்தை ஏற்க வருவோரும்மக்காவிற்கு மீண்டும் திருப்பி அனுப்பப்படுவர்.

இக்காலப் பகுதியில் குரைஷியர் சார்பாக அபூ ரா.ஃ.பி.ஃ. என்பவர் மதீனாவிற்கு அனுப்பப்டுகின்றார். நபிகள் நாயகத்தின் வாழ்க்கை முறை அவரை இஸ்லாத்தில் இணையத்தூண்டுகின்றது. அப்போது அவர், அல்லாஹ்வின் தூதரே!

فَقُلْتُ يَا رَسُولَ اللَّهِ إِنِّي وَاللَّهِ لَا أَرْجِعُ إِلَيْهِمْ أَبَدًا فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنِّي لَا أَخِيسُ بِالْعَهْدِ وَلَا أَحْبِسُ الْبُرُدَ وَلَكِنْ ارْجِعْ فَإِنْ كَانَ فِي نَفْسِكَ الَّذِي فِي نَفْسِكَ الْآنَ فَارْجِعْ قَالَ فَذَهَبْتُ ثُمَّ أَتَيْتُ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَأَسْلَمْتُ

நான் உடன்படிக்கைக்கு மோசடி செய்யமாட்டேன், போர்வையை சுருட்டிக் கொள்ளவும்மாட்டேன், எனினும், நீ திரும்பிச் செல், உனது மனதில் இப்போது அந்த தீர்மானம் இருந்தாலும் திரும்பிச் செல் எனக் கூறினார்கள், நான் திரும்பிவந்தேன், பின்னர் வந்து இஸ்லாத்தில் இணைந்தேன் என்கிறார் அபூரா.ஃ.பி (ரழி) அவர்கள்.

1 – سنن أبي داود (باب الإمام يستجن به العهود برقم / 2377

## இஸ்லாத்தில் போரியல் பண்பாடுகள்.

### போர் எதற்காக செய்யப்படுகின்றது?

தனது நாட்டின் எல்லையை விஸ்தரிப்பதற்காக இஸ்லாம் பிறநாடுகளின் நிலப்பரப்புக்களை ஜிஹாத் என்ற பெயரில் ஆக்கிரிமிக்கின்றது என்ற தப்பான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதைப் பார்க்கின்றோம். தற்காப்பு, எதிரிகளை முறியடித்தல், இஸ்லாமிய மாரக்கத்தை உலகில் பரவச் செய்தல் போன்ற உயரிய இலட்சியங்களின் அடிப்படையிலேயே போரை இஸ்லாம் முன்னெடுக்கின்றது.

நிலப்பரப்பைக் கொள்ளையிடுவதுதான் நோக்கமாக இருந்திருப்பின் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்களுக்குச் சொந்தமான பல நிரப்பரப்புக்களை வெற்றிகொண்ட பின்னர் அவர்களை அங்கு விவசாயம் செய்வதற்கு அனுமதித்திருக்கமாட்டார்கள்.

கைபர் (1) என்ற நகரத்தைக் ஹிஜ்ரி 7வது வருடம் கைப்பற்றிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்கள் செய்து வந்த அவர்களின் நிலங்களில் விவசாயம் செய்வதற்கு அனுமதித்தார்கள். 'கைபர் நகரை யூதர்களிடம் ஒப்படைத்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவற்றில் விவசயாயம் செய்யுமாறும், அதன் விளைச்சலில் அரைவாசியை ஒப்படைத்துவிடுமாறும் பணித்திருந்தார்கள். (2) இது ஒரு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏனெனில், அதே கிரந்தத்தில் இடம் பெறும் இது பற்றிய பிறிதொரு செய்தியில் வெற்றிகொள்ளப்பட்ட பூமி அல்லாஹ்வுக்கும், அவனது தூதுரான முஹம்மத் நபி அவர்களுக்கும், இறைவிசுவாசிகளான மக்களுக்கும் சொந்தமான போது யூதர்கள் அதில் விவசாயம் செய்யப்பபோவதாகவும், அதன் அரைவாசி வருமானத்தை நபி (ஸல்) அவர்களிடம் ஒப்படைப்பதாகவும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நபி (ஸல்) அவர்கள் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்கள் என இடம் பெற்றுள்ளதைப் பார்க்கின்றோம்.(3)

அபூதாவூதாவூத் என்ற நபிமொழிக் கிரந்தத்தில் 'அவற்றில் அரைவாசிப் பகுதியை தனக்கு தந்துவிடுமாறும் பணித்தார்கள். இப்னு ரவாஹா என்ற நபித்தோழர் அவர்கள் இதை அளவிட்ட போது அது நாட்பதாயிரம் வஸக்களாக இருந்தது எனக் கூறப்படுகின்றது. (4)

பலஸ்தீன முஸ்லிம்களின் காணிகளை அபகரித்துள்ள இஸ்ரேலின் நிலைபற்றியும், ஈராக்கை ஆக்கிரிமித்து அங்குள்ள பெற்றோலிய வளங்களைக் கொள்ளையிடும் அமெரிக்க கம்பனிகளினதும் வர்த்தக நடைமுறையுடன் ஒப்பிட்டு நோக்கும் கடப்பாடு நமக்கிருக்கின்றது.

போர் செய்து பிறநாடுகளின் வளங்களைக் கொள்ளையிடுவது நபிகள் நாயகத்தின் நடைமுறையாக இருந்திருப்பின் யுத்தம் இன்றி வெற்றிகொள்ளப்பட்ட யூதர்களின் பிரதேசமான கைபரில் விவசாயம் செய்யுமாறு அனுமதித்திருப்பார்களா என்று சிந்திக்க வேண்டும். இது நபிகள் நாயகத்தின் தாராளத்தன்மைக்கு பெரிய எடுத்துக்காட்டாகும்.

----------------

1- மதீனாவிற்கு வடக்கே 160 கிலோமீற்றர் அப்பாலுள்ள நகரம். இங்கு யூதர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தார்கள்.
2- ஆதார நூல்புகாரி: ஹதீஸ் இலக்கம்: 2163- பாடம் : யூதர்களுடன் இணைந்து விவாசயம் செய்தல்.
3- ஆதாரநூல்: அபூதாவூத். பாடம் மதப்பிட்டு அளவு செய்தல். ஹதீஸ் இலக்கம்: 2963
4- ஆதார நூல் புார, பாடம்: கனிவர்க்கத்தில் ஒரு பகுதியைத் தருவதன் பேரில் விவசாயம் செய்தல். ஹதீஸ் இலக்கம்: 2899

## எதிரிகள், போர்க்கைதிகள் தொடர்பான நடைமுறை

முஸ்லிம்களின் எதிரிகள், போர்க்கைதிகள் தொடர்பான வழிமுறைகள் பற்றி இஸ்லாத்தில் தெளிவாக விபரிக்கப்பட்டிருக்கின்றது. இன்று என்ன அறிவுரைகள், வழிமுறைகள் பற்றிக் கூறப்படுகின்றதோ அவைதிவிடத் தெளிவான வழிமுறைகள் இஸ்லாத்தில் இருக்கின்றது.

முஸ்லிம் போராளிகள் போரின் போது நடந்து கொள்ளவேண்டிய ஒழுங்குகள், வழிமுறைகள் பற்றிய அறிவுரைகள் பற்றி முஹம்மத் நபி அவர்களால் சம்மந்தப்பட்ட போராளிகுளுக்கு வழங்கப்பட்ட பின்பே போராளிகள் போர்களத்தை நோக்கிப் புறப்படுவார்கள்.

போரின் போது முஸ்லிம் படைகள் எதிர் அணியினர் மீது கடுமையாக நடந்து கொள்வது, அவர்களை வெட்டி வீழ்த்துவது போன்ற வழிமுறைகள் போரில் கலந்து கொள்ளும் அனைவரும் பொதுவாகக் கடைப்பிடிக்கின்ற பரஸ்பரவழிமுறைதான்.

தனது போராளிகள் தவறுதலாகவும் பிறரைக் கைலை செய்வதைக் கூட இறைத்தூதர் முஹமத் நபி (ஸல்) அவர்கள் ஆதரிக்கவில்லை. எதிரிகள் மீது நபிகள் நாயகம் அவர்கள் காட்டிய கருணை, அன்பு, பாசம் போன்ற உயரிய பண்புகள் பற்றி இஸ்லாத்தின் எதிரிகளே வாக்கு தந்துள்ளனர்.

இன்று வல்லரசு நாடுகள் தொடுக்கின்ற போரின் போது மீறப்படுகின்ற போர்க்குற்றங்கள் பற்றி உலகின் மீடியாக்களில் வெளியிடப்படுகின்றன. அதை சம்மந்தப்பட்ட நாட்டின் தலைவரோ, அல்லது படையின் தளிபதிகளோ பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. அப்படியானால் மனித உயிர்களுக்கு பெறுமானம் இல்லை என்பதைத்தான் இது உணர்த்துகின்றது.

நபிகள் நாயகத்தின் முக்கியமான படைத்தளபதிகளில் ஒருவர்தான் காலித் பின் வலீத் (ரழி) என்பவர். இவர்கள் **பனூ ஜுதாமா** கோத்திரத்தை முற்றுகையிட்டிருந்தார். முற்றுகையின் போது அம்மக்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு, படை பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். அம்மக்களைக் கொலை செய்யும் படி காலித் (ரழி) அவர்கள் உத்தரிவிட்டபோது அவர்கள், صبأنا، صبأنا அதாவது **மதம்மாறிவிட்டோம், மதம் மாறிவிட்டோம் -இஸ்லாத்தில் இணைந்தோம் என்ற பொருளில்-** கூறினார்கள். குரைஷியரின் மார்க்கமான கு..ப்ர் வழிமுறையைத்தான் இவர்கள் தேர்வு செய்துள்ளனர். எனவே இவர்கள் இஸ்லாத்தின் எதிரிகள்தாம் என அவர்களின் வார்த்தையதைத் தவறாகப் புரிந்த காலித் (ரழி) அவர்கள் கைதிகள் அனைவரையும் கொலை செய்யுமாறு பணித்தார்கள். தளபதியின் கூற்றை பலர் ஏற்றுக் கொலை செய்தார்கள், மற்றும் சிலர் அதை நடைமுறைப்படுத்தாமல் விட்டுவிட்டார்கள். போரில் இருந்து திரும்பியதும் நபிகள் நாயத்திடம் நடந்தது பற்றி எடுத்துக் கூறினார்கள்.

அந்த நேரம், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் اللَّهُمَّ إِنِّي أَبْرَأُ إِلَيْكَ مِمَّا صَنَعَ خَالِدٌ مَرَّتَيْنِ– صحيح البخاري ‘***அல்லாஹ்வே, காலித் நடந்து கொண்ட இந்த நடையில் இருந்தும் நான் உன்பக்கம் நிரபராதியாகிக் கொள்கின்றேன். என இரு தடவைகள் கூறினார்கள் (1)***

இது போன்ற நூற்றுக்கணக்கான சம்பவங்கள் அமெரிக்கா, நேட்டோ படைகளால் ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் நடக்கின்ற போது தை அவர்கள் அஒரு சமாச்சாரமாகவே எடுத்துக் கொள்வதில்லை. மீடியாக்களும் அது பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. உலக அரங்கில் பேசப்படுவதில்லை. இந்த உயரி பண்பாடும், நடைமுறையும் 1500 வருடங்களுக்கு முன்னால் இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் நடந்திருப்பது பிற உயிர்கள் மீதுள்ள அக்கறையைத் தவிர வேறு எதுவாகத்தான் இருக்க முடியும்!

-------------------------

1-ஆதார நூல் புகாரி. பாடம்: காலித் பின் வலீதை தளபதியாக ஜுதாமா கோத்திரத்தாரிடம் அனுப்புதல். ஹதீஸ் இல: 3994

இவ்வாறு உயரிய பண்புகளோடு நடந்து கொண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைதிகளுடன் போர் விதிகளுக்கு மாற்றமாக நடப்பார்கள் என்று நம்பமுடியுமா? முடியவே முடியாது என்பதுதான் நமது நிலைப்பாடாகும்.

முஸ்லிம் படைகளின் சில குறைபாடுகள் பற்றிப் பேசப்படுகின்ற அதே நேரம் அவர்களின் உயரிய பண்பாடுகள் பற்றி ஏறிட்டுக்கூடப் பார்க்க இவர்களின் மனங்கள் இடம் கொடுப்பதில்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படைக்கோ, அல்லது ஒரு படைப்பிரிவுக்கோ தளபதியை நியமித்தால், அவர் தனிமையில் அவரை அழைத்து அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுமாறும், அவர்களுடன் இருக்கும் போராளிகளான முஸ்லிம்களின் நிலையைப் பேணுமாறும் கட்டளையிடுவார்கள். பிறகு, பின்வருமாறு அறிவுரை வழங்குவார்கள்.

اغْزُوا بِاسْمِ اللَّهِ فِي سَبِيلِ اللَّهِ قَاتِلُوا مَنْ كَفَرَ بِاللَّهِ اغْزُوا وَلَا تَغُلُّوا وَلَا تَغْدِرُوا وَلَا تَمْثُلُوا وَلَا تَقْتُلُوا وَلِيدًا صحيح مسلم / برقم : 3261 / 3565

அல்லாஹ்வின் பெயரால், அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள். இறைநிராகரிப்பாளர்களுக்கு எதிராக போரிடுங்கள். அறப்போர் புரியுங்கள், (கனீமத் பங்கீட்டிற்கு முன்) போர்ச் செல்வங்களில் மோசடி செய்துவிடாதீர்கள், ஒப்பந்தங்களை முறிக்காதீர்கள், அங்ககீனம் செய்யாதீர்கள், சிறு குழந்தைகளைக் கொல்லாதீர்கள் … (1) போரின் இடை நடுவில் பாதுகாப்புவேண்டி வரும் மனிதனைக் கொலை செய்வதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

وَإِنْ أَحَدٌ مِنَ الْمُشْرِكِينَ اسْتَجَارَكَ فَأَجِرْهُ حَتَّى يَسْمَعَ كَلَامَ اللَّهِ ثُمَّ أَبْلِغْهُ مَأْمَنَهُ ذَلِكَ بِأَنَّهُمْ قَوْمٌ لَا يَعْلَمُونَ [التوبة : 6] இணைவைப்பாளர்களில் ஒருவன் (நபியே) உம்மிடம் பாதுகாப்பு வேண்டினால் அவன் அல்லாஹ்வின் வார்த்தையான (குர்ஆனை) செவியுறும் பொருட்டு உடனே அவனுக்கு பாதுகாப்பு வழங்குவீராக! பின்னர், அவனுக்குரிய பாதுகாப்பான இடத்தில் (அவனது சமூகத்திடம்) அவனைக் கொண்டு சேர்ப்பீராக! இவர்கள் விபரமற்றவர்கள் என்பதே இதற்கு காரணமாகும் **(2)** என அல்குர்ஆன் குறிப்பிடுவதை போரின் நடுவிலும் எதிரிக்கு பாதுகாப்பை இஸ்லாம் உறுதி செய்துள்ளது என்பதனாலாகும்.

உம்முஹானி (ரழி) அவர்கள் மக்கா வெற்றியின் போது முஸ்லிமல்லாத ஒருவருக்கு பாதுகாப்பு வழங்கியதை அலி (ரழி) அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அந்த மனிதரைக் கொலை செய்ய எத்தணித்தார். இது பற்றி உம்முஹானி (ரழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரிடம் முறையிட்ட போது قد أَجَرْنَا مَنْ أَجَرْتِ يَا أُمَّ هَانِئٍ قَالَتْ أُمُّ هَانِئٍ – صحيح البخاري உம்முஹானி நீ பாதுகாப்பு வழங்கியவருக்கு நாமும் பாது உத்தரவாம் தந்துவிட்டோம் எனக் கூறினார்கள் (3)

இந்த வழிமுறைகளை வல்லரசுகள் போரின் போது கடைப்பிடிக்குமாக இருந்தால் போரால் ஏற்படும் பல பின்விளைளை நிறுத்தி இருக்க முடியும். அது இன்றும் தொடர்கதையாகவே இருக்கின்றது. 1990 களில் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்ட போரில் மாத்திரம் 500000 ஐந்து இலட்சம் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். போரியல் தர்மத்தை உலகுக்கு கற்றுக் கொடுக்கும் வெள்ளையரின் நிலைதான் இது.

----------------------------

-1- ஆதாரநூல்: ஸஹீஹ் முஸ்லிம். ஹதீஸ் இலக்கம்: 3261, 3565 .பாடம்: தலைவர், படைப்பிரிவுகளுக்குத் தளபதிகளை நியமிப்பதும், போர் நெறிமுறைகள் குறித்து அவர்களுக்கு அவர் அறிவுறுத்துவதும். **–2–** அத்தவ்பா. வசனம்: 6 .

(3) ஆதாரநூல்: புகாரி. பாடம்: பெண்களின் பாதுகாப்பு வழங்கல் அங்கீகரிக்கப்பட்டதாகும். இலக்கம்: 2935.

இஸ்லாத்திற்கு எதிராக போர் புரிந்தோரைக் கொலை செய்துவிடுவதுதான் இஸ்லாத்தின் நிலைப்பாடு என்பது தப்பான பிரச்சாரமாகும். மாற்றமாக கைதிகளை மன்னித்தல், பணயக்கைதிகளுக்குப் பதிலாக கைதிகள் பரிமாற்றம் செய்தல், போன்ற உண்ணத நடைமுறையும் இஸ்லாத்தில் இருந்து வந்துள்ளது.

_ *பொதுமன்னிப்பு வழங்குதல்*

_ *கைதிகள் பிரமாற்றம்*

_ *போர்க்கைதிகளை நடந்து கொள்ளும் முறை போன்ற அம்சங்கள் முக்கியமானதாகும்.*

### *பொது மன்னிப்பு வழங்குதல்*

இஸ்லாத்தின் எதிரிகள் வாழ்ந்த பிரதேசம்தான் மக்கா பிரதேசம். நபிகள் நாயகத்தின் இஸ்லாமிப் பிரச்சாரத்தை சகல வழிமுறைகளையும் கடைப்பிடித்து தடை செய்வதில் பல்முனைகளில் செயல்பட்டார்கள். மக்கா பிரதேசம் ஹிஜ்ரி எட்டாவது வருடம் இரத்தம் சிந்தாப் போர் மூலம் நபிகள் நாயகத்தின் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. அங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்ந்து வந்தார்கள், அவர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கி உலக சரித்தில் ஒரு தடயத்தை தனது வாழ்வில் இறைத்தூதர் அவர்கள் பதித்தார்கள். (1)

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டு, பொதுமன்னிப்பளிக்கப்பட்டவர்கள் இஸ்லாத்தில்தான் நடந்திருக்க முடியும். வேறு மதத்தவர்கள் போரில் இவ்வாறு தயாள குணத்துடன் நடந்து கொண்டவரலாற்றை நம்மால் காண முடியவில்லை.

ஒரு பிரதேசத்தில் இனக்கலவரம் வெடித்தால் பெண்கள் கற்பழிக்கப்படுவது, சிறுவர்கள் கொலை செய்யப்படுது என்பது மதத்தின் பெயரால் வெறித்தனமாக நடத்தப்படுகின்றது. கைதிகள் கம்பிக்கூண்டுகளினுள் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றார்கள்.

இதற்கு குஜராத் படுகொலை, குவாண்டனாமோ சிறைச்சாலை, ஆப்கானிஸ்தானில் உள்ள பாக்ராம், ஈராக்கின் அபூகிரைப் போன்ற சிறைக்கூடங்களை உதாரணமாகக் குறிப்பிட முடியும். ஆனால் எதிரிகளையும் சகோதரர்களாக மதித்து கைதிகளை சக தோழர்களைப் போன்று வழிநடத்திய பெருமை இஸ்லாத்திற்கு உண்டு.

பனூஹனீ∴பா கோத்திரத்தின் தலைவரான **ஸுமாமா பின் அஸால்** என்பவர் மதீனாவின் எல்லையில் வைத்து சிறைப்பிடக்கப்பட்டு மதீனாப் பள்ளியின் ஒரு தூண்களில் கட்டப்படுகின்றார். அவர் முக்கியமான தலைவர், எனவே அவரை நல்லமுறையில் நடத்துங்கள் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காவல் படைக்கு உத்தரவிட்டார்கள். அவ்வாறே அவர்கள் நடந்து கொண்டார்கள். முதலாம், இரண்டாம் நாட்களில் இவரோடு உரையாடிய நபி (ஸல்) அவர்கள் மூன்றாவது நாள் அவரை விடுதலை செய்யும்படி பணித்தார்கள். அவர் விடுதலை செய்யப்பட்டதும் அருகில் இருந்த ஒரு நீரோடையில் நீராடிவிட்டு வந்து முஹம்மதே உங்கள் மார்க்கத்தை நானும் ஏற்றுக்கொண்டேன் என இஸ்லாத்தின் சாட்சியங்களை மொழிந்து இஸ்லாத்தில் இணைந்தார். இது போன்ற உண்ணத நடைமுறை நபிகள் நாயத்தின் வாழ்வில் புதியது அல்ல, மாற்றமாக பல தடவைகள் நடந்திருக்கின்றது என்பதை இஸ்லாமிய வரலாற்றில் பார்க்கின்றோம்.

-------------------------------

1- ஆதார நூல்: முஸ்லிம். பாடம் மக்கா வெற்றி. ஹதீஸ் இலக்கம்: 3332.

2- ஆதார நூல்: புகாரி. பாடம் பனூ ஹனீ∴பா கோத்திரமும், ஸுமாமா அவர்களின் செய்தியும். ஹதீஸ் இலக்கம்: 4024. முஸ்லிம். பாடம் கைதியைக்கட்டுவதும், அவர்மீது பரிவாக நடப்பதும். ஹதீஸ் இலக்கம்: 3310.

நபிகள் நாயகத்தின் அர∴பாத்தின பேருரையில் உள்ளடங்கி இருந்து அம்சங்களில் கொலை குற்றம் புரிந்தோரை மன்னிப்புதம் ஒன்றாகும். இதை தற்கால நடைமுறையில் உள்ள மீடியாக்களின் போமல்டி

அறிவிப்பாக நோக்கமுடியாது அது பல்லாயிரக்கணக்கான மக்களை சாட்சியாக வைத்து அவர்கள் மத்தியில் வெளியிட்ட அறிக்கையாகும். அது பிறருடன் தொடர்பானதும் கிடையாது. மாற்றமாக, தனது உறவினர்களில் ஒருவரைக் கொலை செய்தமைக்கான மன்னிப்பாகும்.

**இயாஸ் பின் ரபீஆ** என்பவர் சிறு வயதில் பனூஸ.்.த் கோத்திரத்தில் செவிலித்தாய் ஒருவரிடம் பால்குடித்து வாழ்ந்து கொண்டிருந்த போது هذيل ஹுதைல் என்ற கோத்திரத்தினர் இவரைக் கொலை செய்து விடுகின்றனர். இதற்கு குழுமக் கொலை என்று சொல்வார்கள்.

நபிகள் நாயகத்தின் கை ஓங்கி இருந்ததால் அவருக்காக தாம் கொலை செய்யப்படுவோமோ என்ற பீதியில் வாழ்ந்து அந்தக் கோத்திரத்தார் '***பலிக்குப்பலி தீர்ப்பு தொடர்பில் தமது குடும்பத்தாருடன் தொடர்பான இரத்தம் பற்றி முதலவதாக தான் மன்னித்ததாக*** அறிவிப்புச் செய்தார்கள்.

وَإِنَّ أَوَّلَ دَمٍ أَضَعُ مِنْ دِمَائِنَا دَمُ ابْنِ رَبِيعَةَ بْنِ الْحَارِثِ كَانَ مُسْتَرْضِعًا فِي بَنِي سَعْدٍ فَقَتَلَتْهُ هُذَيْلٌ ( صحيح مسلم )

நமது இரத்தம் பலி பற்றியதில் முதலாவதாக நாம் தள்ளுபடி செய்வது ஹாரிஸின் மகன் ரபீஆவின் இரத்தமாகும். அவர்கள் பனூஸ.்.த் கோத்திரத்தில் பாலுட்டப்பட்டப்பட்டுக் கொண்ருந்த வேளையில் ஹுதைல் என்ற கோத்திரம் அவரைக் கொலை செய்திருந்தனர். (அது மன்னிக்கட்டுவிட்டது) என நபிகள் நாயகம் அவர்கள் அறிவிப்புச் செய்ததை அடுத்த ஹுதைல் கோத்திரத்தார் மதிப்பிட முடியாத அகமகிழ்ச்சியில் இருந்திருப்பார்கள் என்பது ஒரு புறம் இருக்க, இது எவ்வளவு பெரிய மனிநேயப் பண்பாடு என்று சிந்தியுங்கள்.

**குஜ்ராத்** முஸ்லிம்களை தீயிலிட்டுக் கொழுத்தி, பெண்களின் கற்புகளைச் சூறையாடிய இந்து வெறியர்களுக்கு அதே குஜ்ராத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது கொல்லப்பட்டவர்களை முஸ்லிம்கள் மனித நேயத்துடன் நடத்தவில்லையா?

## *கைதிகள் பிரமாற்றம்*

கைதிகள் பரிமாற்றம் என்பது இஸ்லாம் அங்கீகரித்து, நடைமுறைப்படுத்திய போர் தொடர்பான அதன் வழிமுறைகளில் ஒன்றாகும். போர்க்குற்றவாளிகளை நஷ்டஈட்டுத்தொகை பெற்று மன்னித்தல், அவர்களை அன்போடும் கருணையோடும் நடத்துதல் என்பது இஸ்லாம் முன்வைக்கின்ற போரியல் கோட்பாடுகளாகும்.

فَإِذَا لَقِيتُمُ الَّذِينَ كَفَرُوا فَضَرْبَ الرِّقَابِ حَتَّىٰ إِذَا أَثْخَنْتُمُوهُمْ فَشُدُّوا الْوَثَاقَ فَإِمَّا مَنًّا بَعْدُ وَإِمَّا فِدَاءً حَتَّىٰ تَضَعَ الْحَرْبُ أَوْزَارَهَا [محمد : 4] நீங்கள் இறைநிராகரிப்பாளர்களை (போரில்) நேருக்குநேராக நீங்கள் சந்திக்கின்ற போது (அவர்களின்) பிடரிகளைத் துண்டாடிவிடுங்கள். அவர்களை நீங்கள் கடுமையாகத்தாக்கி அழித்ததும் (அவர்கள் கைதிகளாகப் பிடிபட்டால் அவர்களை) பலமாகக் கட்டுங்கள். பின்னர், ஒன்றில் (அவர்களை) மன்னிக்கவும், அல்லது, (முஸ்லிம் கைதியை விடுவித்தோ அல்லது, நஷ்ஈட்டுத்தொகை பெற்றோ அவர்களை) விடுதலை செய்யவும். போருக்கான ஆயத்தங்கள் முடிவுக்குவரும்வரை (இது நீடிக்க வேண்டும்). (2)

-------------------------------

*1- ஆதார நூல்: முஸ்லிம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறுதி ஹஜ். ஹதீஸ் இல: 2137.*

*2- அத்தியாயம்: முஹம்மத். வசனம்: (4).*

## போர்க்கைதிகளோடு நடந்து கொள்ளும் முறை

போர்க் கைதிகளை நடத்தும் முறையில் இஸ்லாமிய மார்க்கம் உண்ணத நிலையில் காணப்படுகின்றது. கைதிகள் அடிப்படை உரிமைகளுடன் நடத்தப்பட வேண்டும் என்பதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும்,

அவர்களின் தோழர்களும் கண்டிப்பாக இருந்தார்கள்  என்பதற்கான பல சான்றுகளை இஸ்லாத்தில் பார்க்கின்றோம்.

பத்ர் என்ற இடத்தில் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு மக்கா இறை நிராகரிப்பாளர்களுக்கும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இடையில் போர் நடை பெற்றது. அதில் எதிரிணியின் தரப்பில் பலர் கொலை செய்யப்பட்டனர், பலர் கைதிகளாக பிடிபட்டனர், அவர்களில் (நபி ஸல் அவர்களின் சிறிய தந்தையர்களில் ஒருவரான அப்பாஸ் என்பவரும் ஒருவர்.

عن جَابِرَ بْنَ عَبْدِ اللَّهِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ لَمَّا كَانَ يَوْمَ بَدْرٍ أُتِيَ بِأُسَارَى وَأُتِيَ بِالْعَبَّاسِ وَلَمْ يَكُنْ عَلَيْهِ ثَوْبٌ فَنَظَرَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ لَهُ قَمِيصًا فَوَجَدُوا قَمِيصَ عَبْدِ اللَّهِ بْنِ أُبَيٍّ يَقْدُرُ عَلَيْهِ فَكَسَاهُ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِيَّاهُ فَلِذَلِكَ نَزَعَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَمِيصَهُ الَّذِي أَلْبَسَهُ–  صحيح البخاري

*அவர் ஆடையின்றி கொண்டு வரப்பட்டதை அவதானித்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவருக்கென பொருத்தமான ஆடையாக அப்துல்லாஹ் பின் உபையின் ஆடையைக் கண்டார்கள். அதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு அணிவித்தார்கள். இதன்காரணமாகத்தான அந்த உபை மரணித்த போது நபிகள் நாயகம் அவர்கள் தனது ஆடையைக் கழற்றி அவருக்கு அணிவித்தார்கள் என ஜாபிர் (ரழி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.    (1)*

1907 லாஹாய் ஒப்பந்தம், 1949 ஜெனிவா ஒப்பந்தங்களில் கைதிகள் முறைகேடாக நடத்தப்படுவது, மணரம் சம்பவிக்கும் விதமாக நடத்தப்படுவது, வன்முறைக்கு உட்படுத்துவது போன்ற வழிமுறைகள் கைதிகள் விஷயத்தில் தவிர்ககப்பட வேண்டும் எனன வலியுறுத்தப்பட்டிருப்பதை வரவேற்க முடியும். அதே வேளை, இஸ்லாத்தில் இதை முஸ்லிம்கள் காலம் காமாகப் பேணி வந்தார்கள் என்பதை நாம் மறுதலிக்க முடியாது. கைதிகள் சித்திரிவதை செய்யப்படுவதை இஸ்லாம் வண்மையாகக் கண்டித்துள்ளது. மின்சாரம் பாய்ச்சிக் கொலை செய்தல், தீயிலிட்டுக் கொலை செய்தல் போன்ற வன்முறைகளை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ قَالَ بَعَثَنَا رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي بَعْثٍ وَقَالَ لَنَا إِنْ لَقِيتُمْ فُلَانًا وَفُلَانًا لِرَجُلَيْنِ مِنْ قُرَيْشٍ سَمَّاهُمَا فَحَرِّقُوهُمَا بِالنَّارِ قَالَ ثُمَّ أَتَيْنَاهُ نُوَدِّعُهُ حِينَ أَرَدْنَا الْخُرُوجَ فَقَالَ إِنِّي كُنْتُ أَمَرْتُكُمْ أَنْ تُحَرِّقُوا فُلَانًا وَفُلَانًا بِالنَّارِ وَإِنَّ النَّارَ لَا يُعَذِّبُ بِهَا إِلَّا اللَّهُ فَإِنْ أَخَذْتُمُوهُمَا فَاقْتُلُوهُمَا (صحيح البخاري  )

*நபித்தோழர் அபூஹுரைரா (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்:  நம்மை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு படையினருடன் அனுப்பினார்கள், அப்போது அவர்கள், நீங்கள் இன்னார் இன்னாரை சந்தித்தால் அவர்களை (பெயரைக் குறிப்பிட்டு)க் தீயிட்டுக் கொழுத்தி விடுங்கள் எனக் கூறினார்கள். நாம் பயணம் சொல்வதற்காகச் சென்ற போது நான் இன்னார், இன்னாரை நீங்கள் தீயிலிட்டுக் கொழுத்துங்கள் எனப்பணித்திருந்தேன், நெருப்பால் வேதனை செய்வது அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரியதாகும். அவ்விருவரையும் நீங்கள் கைது செய்தால் நீங்கள் கொலை செய்துவிடுங்கள் எனப்பணித்தார்கள்.*

-------------------------

*(1)  ஆதார நூல்: புகாரி. பாடம்: கைதிகளுக்கு அடை அணிவித்தல். ஹதீஸ் இலக்கம்: 2786*

*(2)  ஆதாரநூல் புகாரி: பாடம்: வழியனுப்புதல். ஹதீஸ் இலக்கம்: 2734*

கைதிகளுக்கு **பொதுமன்னிப்பு** வழங்குதல் என்ற தலைப்பில் கைதிகளுடன் நடந்து கொள்ளும் முறை பற்றி இஸ்லாம் குறிப்பிடுகின்ற முக்கிய சில தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன.

## இஸ்லாமிய ஆட்சியின் கீழ்வாழ்ந்த சிறுபான்மை மதத்தவரின் பன்முக நிலை

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழும் மக்களை معاهد -முஆஹத்- ஒப்பந்தம் செய்யப்பட்டவர், ஒப்பந்தத்தின் கீழ் வாழ்பவர் என்ற பொருள் கொள்ளப்படும். இவர்களை أهل الذمة என்றும் கூறப்படும். இஸ்லாமிய அரசின் பொறுப்பின் கீழ் வாழ்வதனால் இந்தப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றனர்.

قال ابن الأثير : "وسمي أهل الذمة لدخولهم في عهد المسلمين وأمانهم" (1)

முஸ்லிம்களின் ஒப்பந்தத்தின் கீழும், அவர்களின் பாதுகாப்பின் கீழும் இவர்கள் வாழ்வதனால் இவர்கள் அஹ்லுத்திம்மா என அழைக்கப்படுகின்றனர். (1)

**العَهْد والأمَانِ والضَّمان والحُرمَة والحقِّ ஆகிய சொற்பிரயோகங்கள் மூலம் திம்மிக்கள் பற்றிய பதிவுகள் குறிப்பிடுகின்றன.**

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழ்ந்த முஸ்லிம் அல்லாத மக்களின் பாதுகாப்பிற்காகவே **ஜிஸ்யா** வரி அறவிடப்பட்டது. அவர்களின் விருப்பத்தின் பேரில் சேகரிக்கப்பட்ட அந்த நிதி அவர்களின் பாதுகாப்பு நலனுக்காவே செலவும் செய்யப்பட்டது. நோயாளிகள், சிறுவர்கள், வயோதிபர்கள் போன்றோரிடம் இருந்து அது சேமிக்கப்பட்டவில்லை.

இது சாதாரணமான விஷயமாக இஸ்லாம் நோக்கவில்லை. இஸ்லாமிய அரசினதும், முஸ்லிம்களினதும் பாரிய பொறுப்பாகவும் நோக்குகின்றது. சிறுபான்மையினர், திம்மிக்களுடன் நடந்து கொள்வதில் மோசடி செய்வது பற்றிய நபியின் பின்வரும் எச்சரிக்கையை கவனியுங்கள்.

(திம்மிக்களிடம் இருந்து) தீனார், தரிஹம் (தங்க, வெள்ளி) நாணயங்கள் வராமல் இருந்தால் (பொருளாதார) நிலைமை எவ்வாறு இருக்கும் என அபூஹுரைரா (ரழி) அவர்கள் கூறிய போது , அபூஹுரைராவே! அது எவ்வாறு நடை பெறும் என நினைக்கின்றீர் என மக்கள் கேட்டபோது: அபூஹுரைராவின் ஆன்மா யார் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமிட்டு உண்மையாளரும், உண்மைப்படுத்தப்பட்டுவருமான நபிகள் நாயகத்தின் கூற்றைக் கொண்டுதான் சொன்னேன் என்றார். அது எப்டி என மக்கள் கேட்க:

قَالُوا عَمَّ ذَاكَ قَالَ تُنْتَهَكُ ذِمَّةُ اللَّهِ وَذِمَّةُ رَسُولِهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَيَشُدُّ اللَّهُ عَزَّ وَجَلَّ قُلُوبَ أَهْلِ الذِّمَّةِ فَيَمْنَعُونَ مَا فِي أَيْدِيهِمْ (2)

அல்லாஹ்வுடையவும், அவனது தூதர் உடையதுமான (பெயரில் செய்யபட்ட ஒப்பந்தம்) திம்மிக்கள் விஷயத்தில் மீறப்படும். அஹ்லுத்திம்மா أهل الذمة மக்களின் இதயங்களை அல்லாஹ் இறுக்கமாக்குவான், அதனால் தமது கரங்களில் இருப்பதை –ஜிஸ்யா- கராஜ்- வரிகளை – வழங்காது தடுத்துக் கொள்வார்கள் எனக் கூறினார்கள். (2)

-------------

1- ابن الأثير : النهاية في غريب الأثر – (2 / 421)

2- محمدبن إسماعيل البخاري : بَاب إِثْمِ مَنْ عَاهَدَ ثُمَّ غَدَرَ .

فيه .... والتَّوْصِيَة بِالْوَفَاءِ لِأَهْلِ الذِّمَّة لِمَا فِي الْجِزْيَة الَّتِي تُؤْخَذ مِنْهُمْ مِنْ نَفْع الْمُسْلِمِينَ ، وَفِيهِ التَّحْذِير مِنْ ظُلْمهمْ وَأَنَّهُ مَتَى وَقَعَ ذَلِكَ نَقَضُوا الْعَهْد فَلَمْ يَجْتَبِ الْمُسْلِمُونَ مِنْهُمْ شَيْئًا فَتَضِيق أَحْوَالهمْ (1)

முஸ்லிம்களுக்குப் பயன்தரும் ஜிஸ்யாவரியில் أهل الذمة திம்மிக்களுடன் சரிவர நடந்து கொள்வது பற்றிய நபித்து அறிவுரை -**வஸிய்யத்** - இதில் உள்ளடங்கி இருப்பதுடன், அவர்களுக்கு அநீதி இழைப்பது பற்றிய எச்சரிக்கையும் இருப்பதையும் இந்த நபிமொழியில் பொதிந்திருக்கின்றது எனக் குறிப்பிடும் அறிஞர் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி அவர்கள், இது எப்போது நடந்ததோ அப்போதிருந்தே முஸ்லிம்கள் அவர்களிடம் இருந்து எதையும் ஜிஸ்யா வரியாகக் கொண்டுவரவில்லை. இதனால் அவர்களின் (பொருளாதார) நிலையும் மோசமடைந்தது எனக் குறிப்பிடும் இமாம் அவர்கள், ஈராக் பிரதேசத்தில் இந்த முன்னறிவிப்பு முதலாவதாக நடை பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். (1)

சிறுபான்மையினர் உரிமைகள் பற்றிய ஆளமான அறிவுரையை இஸ்லாமிய மார்க்கத்தைப் போல் வேறு எந்த மார்க்கத்திலும் பார்க்க முடியாது.

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو رَضِيَ اللَّهُ عَنْهُمَا عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ مَنْ قَتَلَ مُعَاهَدًا لَمْ يَرِحْ رَائِحَةَ الْجَنَّةِ وَإِنَّ رِيحَهَا تُوجَدُ مِنْ مَسِيرَةِ أَرْبَعِينَ عَامًا (2)

இஸ்லாமிய அரசின் ஒப்பந்தக்காரர்களை- திம்மிக்களை- யார் கொலை செய்கின்றானோ அவன், சுவனத்தின் வடையை நுகர முடியாது. அதன் வாடை நர்பது ஆண்டுகள் நடை தூரம் அளவு கிடைக்கப்பெறும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (2)

فَقَالَا إِنَّ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ مَرَّتْ بِهِ جِنَازَةٌ فَقَامَ فَقِيلَ لَهُ إِنَّهَا جِنَازَةُ يَهُودِيٍّ فَقَالَ أَلَيْسَتْ نَفْسًا – صحيح البخاري

அப்துர்ரஹ்மான் பின் அபீலைலா (ரழி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஸஹ்ல் பின் ஹனீ஺ப் (ரழி) அவர்களும்,கைஸ் பின் ஸ஺த் (ரழி) அவர்களும் காதிஸிய்யாவில் அமர்ந்து கொண்டிருந்தவாறு இருந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அருகாமையால் ஜனாஸா ஒன்று கொண்டுவரப்பட்டது. அவ்விரும், எழுந்தார்கள். அது அஹ்லுத்திம்மாவைச் சார்ந்த ஜனாஸாதானே எனக் கூறப்பட்டது. அதற்கு அவ்விரும், நபிகள் நாயகத்தின் முன்னிலையில் யூதர் ஒருவரின் ஜனாஸா கொண்டுவரப்பட்டது. அதற்காக நபி (ஸல்) அவர்கள் எழுந்தார்கள். அது யூதரின் ஜனாஸாவாகிட்டே (ஏன் எழுகின்றீர்கள்) எனக் கேட்கப்பட்ட போது, அதுவும் ஒரு உயிர்தானே! என்றார்கள். (3)

அல்லாஹ்வினதும், அவனது தூதரினதும் பொறுப்பைக் கொண்டு திம்மிக்கள் விஷயத்தில் நான் அறிவுரை கூறுகின்றேன், அவர்களின் உடன்படிக்கைகள் நிறைவேற்றப்படுவதையும், அவர்களுக்காக போராடுவதையும், அவர்களது சக்திக்கு உட்பட்டே தவிர அவர்களை சிரமப்படுத்தக் கூடாது என்றும் வலியுறுத்துகின்றேன் என உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள். (4)

بَقِيَ عَلَيْهِمْ شَيْءٌ مِنْ الْخَرَاجِ فَقَالَ إِنِّي أَشْهَدُ أَنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ إِنَّ اللَّهَ عَزَّ وَجَلَّ يُعَذِّبُ يَوْمَ الْقِيَامَةِ الَّذِينَ يُعَذِّبُونَ النَّاسَ

ஹிஷாம் பின் ஹகீம் (ரழி) அவர்கள் ***ஷாம்*** தேசத்தில் அஹ்லுத்திம்மா மக்களில் சிலருக்கு அருகாமையால் நடந்து சென்றார், அவர்கள் சூரியனின் கீழ் நிறுத்தப்பட்டடிருப்பதைக் கண்டார், இவர்கள், எதற்காக இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளனர் எனக்கேட்டார். இவர்கள் மீது –கராஜ்- நிலவரியில் பாக்கி இருக்கின்றது என மக்கள் கூறினார்கள். மனிதர்களை வேதனை செய்பவர்களை அல்லாஹ் மறுமையில் வேதனை செய்வான் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றேன் எனக் கூறினார். (5)

------------------------------

(1-457 / 9) – فتح الباري لابن حجر (2) **بَاب إِثْمِ مَنْ قَتَلَ مُعَاهَدًا بِغَيْرِ جُرْمٍ** - (2930) رقم الحديث (3). ஸஹீஹுல் புகாரி. 1229. யூதரின் ஜனாஸாவிற்காக எழுந்து நிற்பது.

4- صحيح البخاري : بَاب يُقَاتَلُ عَنْ أَهْلِ الذِّمَّةِ وَلَا يُسْتَرَقُّونَ (**5**) ஆதார நூல் முஸ்னத் அஹ்மத் ஹ. இ: 14790

## சிறுபான்மை மதத்தவரான திம்மிக்களும் உரிமைகளும்

இவர்கள், இஸ்லாமிய ஆட்சியின் கீழ்வாழ்ந்த மக்களாகும். நபிகள் நாயகத்தின் காலம் முதல் முஸ்லிம்களின் ஆட்சியில் வாழ்ந்த இம்மக்கள் மிகவும் கண்ணியமாக நடத்தப்பட்டார்கள் என்பதைப் பின்வரும் வரலாற்றுப் பதிவுகள் மூலம் அறிய முடிகின்றது.

## முஸ்லிம் அரசுகள் வழங்கிய மத சுதந்திரம்

முஸ்லிம் அரசுகள் தமது ஆட்சியின் கீழ் வாழ்ந்த சிறுபான்மையினருக்கு வழங்கிய உரிமைகள், அவர்களுடன் அவை நடந்து கொண்ட தாராளத்தன்மைகள் பற்றிய செய்தியை இஸ்லாமிய நூல்களில் இருந்து மேற்கோள்காட்டுவதை விட மாற்றுமதத்தவரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதே சாலச் சிறந்தாகும். அதனால், அவர்கள் சிலரது வாக்கு மூலம் பற்றி இங்கு தப்படுகின்றது.

சீட்.அர்னோலட் . இவர் ஒரு கிரிஸ்தவர் الدعوة إلى الإسلام என்ற தலைப்பில் ஒரு நூலை இவர் யாத்துள்ளார்.

இதனை, حسن إبراهيم حسن وعبد المجيد عابدين وإسماعيل النحراوي என்ற இரு பெரும் அறிஞர்கள் மொழியாக்கம் செய்துள்ளனர். அதில் 48 பக்கத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

" ويمكننا أن نحكم من الصِّلات الودية التي قامت بين المسيحيين والمسلمين من العرب بأن القوة لم تكن عاملاً حاسماً في تحويل الناس إلى الإسلام. فمُحَمد نفسه قد عقد حلفاً مع بعض القبائل المسيحية، وأخذ على عاتقه حمايتهم ومنحهم الحرية في إقامة شعائرهم الدينية. كما أتاح لرجال الكنيسة أن ينعموا بحقوقهم ونفوذهم القديم في أمن وطمأنينة ".

கிரிடதவர்களுக்கும் அரேபிய முஸ்லிம்களுக்கும் இடையில் உருவான பாசப்பிணைப்பு என்பது அதிகாரத்தின் மூலமான பிணைப்பைக் கொண்டு மக்கள் இஸ்லாத்தின் பக்கம் மாற்றப்படவில்லை. முஹம்மத் கிரிஸ்தவக் கோத்திரங்களுடன் நட்பை ஏற்படுத்தி இருந்தார். அவர்களின் பாதுகாப்பை தனது தோழின் மீது எடுத்துக் கொண்டார். அவர்கள் தமது சமய அனுஷ்டானங்களை நிறைவேற்ற வழி செய்தார். அவ்வாறோ, கிரிஸ்தவ மதகுருக்கள் தமது உரிமைகளுடனும், அதிகாரத்துடனும் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் நடமாட வழிவகை செய்தார்.

ويقول في صفحة 51: " ومن هذه الأمثلة التي قدمناها آنفاً عن ذلك التسامح الذي بسطه المسلمون الظافرون على العرب المسيحيين في القرن الأول من الهجرة، واستمر في الأجيال المتعاقبة، نستطيع أن نستخلص بحق أن هذه القبائل المسيحية التي اعتنقت الإسلام، إنما فعلت ذلك عن اختيار وإرادة حرة. وإن العرب المسيحيين الذين يعيشون في وقتنا هذا بين جماعات مسلمة لشاهد على هذا التسامح ".

அரபு முஸ்லிம்கள் ஹிஜ்ரி முதலாம் ஆண்டு கிரிஸ்வர்களுக்கெதிராக பெற்ற தமது வெற்றிச் செல்வாக்கு மதசகிப்புத்தன்மையோடு பின்வரும் சந்ததிகளிலும் தொடர்ந்தது என்பது பற்றி நாம் முன்னர் எடுத்துக்காட்டிய உதாரணங்கள் மூலம் கிரிஸ்தவக் கோத்திரங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது என்பது சுயமான முடிவின் பேரிலும், சுதந்திரமாகவுமே. தற்காலத்தில் முஸ்லிம் அமைப்பினர் மத்தியில் வாழ்கின்ற அரபுகிரிஸ்தவர்கள் இந்த மத சகிப்புத்தன்மைக்கோர் சாட்சியான எடுத்துக் காட்டாகும்.

அவர் அதில் 53வது பக்கத்தில்:

ويقول في صفحة 53: " ولما بلغ الجيش الإسلامي وادي الأردن، وعسكر أبو عبيدة في فحل، كتب الأهالي المسيحيون في هذه البلاد إلى العرب يقولون: (1)

___________

1- محمد قطب ، شبهات حول الإسلام - (1 / 174)

ஜோர்தானின் பள்ளத்தாக்கை இஸ்லாமியப் படை சென்றடைந்து அதன் தளபதியான அபூஉபைதா பஹ்ல் என்ற பிரதேசத்தில் முகாமிட்ட போது அப்பிரதேசத்தில் வாழ்ந்த கிரஸ்தவ சமய மக்கள் அரபு முஸ்லிம்களுக்கு பின்வருமாறு கடிதம் எழுதினார்கள்.

يا معشر المسلمين أنتم أحب إلينا من الروم، وإن كانوا على ديننا. أنتم أوفى لنا وأرأف بنا وأكف عن ظلمنا وأحسن ولاية علينا "

முஸ்லிம்களே! நீங்கள் ரோமர்களை விட எமக்கு நேசத்திற்குரியவர்கள். அவர்கள் எமது சமயம் சார்தோராக இருந்த போதிலும் சரியே! நீங்களே எமக்கு அனைத்தையும் நிறைவேற்றித்தருபவர்கள், நீங்கள்தாம் எம்முடன் பாசமானவர்களும், எமக்கு எதிராக வரும் அநீதி தடுத்து நிறுத்துபவர்களும், எம்மை ஆட்சி செய்ய சிறந்தவர்களும் . (1) இவ்வாறு அவர்கள் தமது வாக்கு மூலத்தை உலகுக்கு தெரியப்படுத்தியுள்ளார்கள்.

சுத் (2) الزط என்ற இனத்தவரின் சாட்சியமும் மற்றொரு வரலாற்றுச் சான்றாகும். பாரஸீக மன்னர் ஹுர்முஸானின் ஆட்சியில் கடுமையாக வதைக்கப்பட்ட இவர்கள் பிற்காலத்தில் இஸ்லாத்தில் இணைகின்றார்கள்.

உமர் பின் கத்தாப் (ரழி) அவர்களின் காலத்தில் இந்திய இனமான **அஸாவிரா, ஸயாபிஜா,** பாரஸீகத்தில் தங்கி இருந்து சுத் இனம் ஆகிய இந்திய ***சுத்*** இன மக்கள் அதிகமாக அபூமூஸா அல்அஷ்அரிய்யி (ரழி) அவர்களிடம் இஸ்லாத்தை தழுவினார்கள். இது வர்கள் ஹிஜ்ரி: 16 (கி.பி.638) **துஸ்துர்** என்ற பாரஸீக மாகாணத்தை முற்றுகையிட்டிருந்த போது நடந்துள்ளது. அஹ்வாஸ் மாகாணத்தில் இராணுவ பலம் பொருந்திய இனமாகக் காணப்பட்ட அஸாவிராக்கள் இஸ்லாம் வளர்வதைக் கண்டு முஸ்லிம்களை எதிரப்பதில் பயனில்லை என்ற முடிவிற்கு வந்தார்கள். சோஸ் நகரம் அபூ மூஸா (ரழி) அவர்களின் தலைமயில் வெற்றி கொள்ளப்பட்டுவிட்டது. இந்நிலையில், பத்துப்பேர்கள் கொண்டு குழுவினரை பின்வரும் உடன்படிக்கையின் அடிப்படையில் அபூமூஸா (ரழி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள்.

அதில் அவர்கள் இஸ்லாத்தில் முழுமையாக இணைதல், அரேபியரின் பகைமை எதிரிகளுக்கு எதிராக அரபுக்களின் அணியில் இருந்து போராடுதல், போர்க் கொடுப்பனவில் தம்மை இணைத்துக் கொள்ளல், அவர்கள் விரும்புகின்ற அரபுக்கோத்திரத்துடன் இணைவதற்கான முழு அங்கீகாரம் போன்ற இன்னோரென்ன அம்சங்கள் உள்ளடங்கப்பட்டடிருந்தன. அப்போது முஸ்லிம் தளபதியான அபூமூஸா அல்அஷஅரிய்யி (ரழி) அவர்கள் இல்லை எமக்குள்ள உரிமை எதுவோ அவை உங்களுக்கும் உண்டு. உங்களுக்கு எது இருக்கின்றதோ அதுவும் நமக்குண்டு எனக் கூறிவிட்டு உமர் பின் கத்தாப் (ரழி) அவர்களுக்கு கடிதம் எழுதி விபரம் கேட்டபோது. அவர்கள் விடுக்கின்ற கோரிக்கை நிறைவேற்றுங்கள். இது இராணுவத்திற்கு ஒரு பலத்தை தேடித்தரும் என்ற கருத்தில் மறுமொழி அனுப்பி இருந்தார்கள். இதை அபூமூஸா அல்அஷஅரிய்யி (ரழி) அவர்கள் ஸுத் மக்களுக்கு தெரியப்படுத்திய போது இஸ்லாத்தில் இணைந்து துஸ்துர் மாகாண முற்றுகையிலும் கலந்து கொண்டதாக இஸ்லாமிய வரலாறு குறிப்பிடுகின்றது. (3)

---

1- محمد قطب، شبهات حول الإسلام - (1 / 174)

2- الزط بضم الزاي وتشديد الطاء هو تعريب للكلمة الفارسية جت Jat أو . Jets وقد أتفق المؤرخون والجغرافيون واللغويون على أصلهم من بلاد الهند إلى بلاد فارس والعراق لغلاء وقع هناك ساق وراءه الفقر والفاقة) (الزط وموقعهم في التاريخ الإسلامي - (1 /3 )

3- الزط وموقعهم في التاريخ الإسلامي - (1 / 21)

## ஒப்பதந்தங்கள், உடன்படிக்கைகளைப் பேணுவதில் இஸ்லாம் காட்டும் அக்கறை

ஒப்பதந்தங்கள் உடன்படிக்கைகள் என்பது சாதாராண விஷயமாக இஸ்லாம் கருதவில்லை. மாற்றமாக அதை கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்ட வேண்டிய கட்டளையாக நோக்குகின்றது. அதை அல்லாஹ்வுடன் செய்யப்படுகின்ற ஒன்றாகவும் கருதுகின்றது. அத்துடன் ஒப்பந்தங்களை மீறப்பட முடியாத ஒன்றாகவும், அவ்வாறு மீறப்படுவது பாரிய குற்றமாகவும் நோக்குகின்றது.

وَبِعَهْدِ اللَّهِ أَوْفُوا ذَلِكُمْ وَصَّاكُمْ بِهِ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ (1)

*அல்லாஹ்வுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கையை பூரணமாகமாக நிறைவேற்றுங்கள். நீங்கள் படிப்பினை பெறுவதற்காக அதைக் கொண்டு அவன் உங்களுக்கு கட்டளையிடுகின்றான். (1)*

**وَأَوْفُوا بِعَهْدِ اللَّهِ إِذَا عَاهَدْتُمْ وَلَا تَنْقُضُوا الْأَيْمَانَ بَعْدَ تَوْكِيدِهَا وَقَدْ جَعَلْتُمُ اللَّهَ عَلَيْكُمْ كَفِيلًا إِنَّ اللَّهَ يَعْلَمُ مَا تَفْعَلُونَ (91) وَلَا تَكُونُوا كَالَّتِي نَقَضَتْ غَزْلَهَا مِنْ بَعْدِ قُوَّةٍ أَنْكَاثًا تَتَّخِذُونَ أَيْمَانَكُمْ دَخَلًا بَيْنَكُمْ (2)**

*நீங்கள் அல்லாஹ்வுடன் செய்து கொள்ளும் உடன்படிக்களை பரிபூரணமாக நிறைவேற்றுங்கள், சத்தியங்கள் உறுதி செய்யப்பட்ட பின்னர் அவற்றை நீங்கள் முறித்துக் கொள்ளாதீர்கள். (இதற்கு) பொறுப்பாளனாக நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்வை ஆக்கி இருந்தீர்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வது பற்றி அறிகின்றான். உங்கள் சத்தியங்களை உங்களுக்கிடையில் வருவாய்க்குரியதாக எடுத்துக் கொள்ளவும், ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தைவிட பலம் பொருந்தியதாக இருப்பதாலும் (ஆடையை) நெய்து, அது பலமிக்கதாக மாறிய பின்னால், பல கூறுகளாக அதைக் குலைத்துக் கொண்டவளைப் போன்று (ஒப்பந்தங்ளை முறிப்போராக) நீங்கள் ஆகிவிடவேண்டாம். (2)*

[المائدة : *1*] يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَوْفُوا بِالْعُقُودِ நம்பிக்கை கொண்டோரே உடன்படிக்கைகளை பரிபூரணமாக நிறைவேற்றுங்கள் (3)

ஒரு நாட்டுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை, ஒப்பத்தம் அமுலில் இருக்கின்ற வேளையில் அந்த நாட்டை விட பலம் பொருந்தி மற்றொரு நாடு முதல் அந்நாட்டுக்கு எதிராக ஒப்பந்தம் செய்ய முன்வருகின்ற போது அதைமுறித்துவிட்டு புதிய நாட்டுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதை, அல்லது ஒரு சமூகத்துடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்தை உலகியல் இலாபங்களுக்காக முறித்துக் கொள்வதை இஸ்லாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றது என்பதை மேற்படி குர்ஆனிய வசனங்கள் விளக்குகின்றன. (4)

ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாழ்கின்ற ஒருவனைக் கொலை செய்வதை எச்சரிக்கும் நபிமொழியை இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் விளக்குகின்ற போது

**وَالْمُرَاد بِهِ مَنْ لَهُ عَهْد مَعَ الْمُسْلِمِينَ سَوَاء كَانَ بِعَقْدِ جِزْيَة أَوْ هُدْنَة مِنْ سُلْطَان أَوْ أَمَان مِنْ مُسْلِم (5)**

ஜிஸ்யாவரி, நாட்டுத்லைவருடன் செய்யப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை, அல்லது ஒருமுஸ்லிமால் வழங்கப்பட்ட பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதைக் குறிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். (5)

இவை அனைத்தும் முஸ்லிம்கள் தாம் பிற நாடு, சமூகம், இனம், தனிபர் ஆகியோருடன் செய்து கொள்கின்ற உடன்படிக்கைகளில் சரியாக நடக்கவேண்டும் என்பதை உணர்த்துகின்ற அம்சங்களாகும். அல்லாஹ்வின் பெயரை முன்னிலைப்படுத்தி செய்யப்படுகின்ற ஒப்பதங்களை முறிப்பது பாரிய குற்றமாகும்.

________________

-1 الأنعام :**152** — 2 – النحل : ***91*** ، ***92*** — *3*- [المائدة : *1*

-4- محمد بن جرير الطبري : جامع البيان في تأويل آي القرآن – (17 / 283) — -5- فتح الباري لابن حجر

الْمُسْلِمُونَ تَتَكَافَأُ دِمَاؤُهُمْ يَسْعَى بِذِمَّتِهِمْ أَدْنَاهُمْ وَيُجِيرُ عَلَيْهِمْ أَقْصَاهُمْ وَهُمْ يَدٌ عَلَى مَنْ سِوَاهُمْ முஸ்லிம்களின் இரத்தங்கள் சமமானதாகும். அவர்களின் கீழ்நிலையில் உள்ளோரின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்குவது அனைவர் மீதுமுள்ள கடமையாகும். அவர்களில் கீழ் நிலையில் இருப்போர் அவர்களுக்கு பாதுகாப்புவழங்குவார். பிறரை விடுத்து அவர்கள் அனைவரும் சமமானவர்களே! (1) என வந்துள்ள ஹதீஸை விளக்குகின்ற அறிஞரான இமாம் பகவி (ரஹ்) அவர்கள் :

إن واحِدًا مِنْ الْمُسْلِمِينَ إِذَا آمَنَ كَافِرًا حَرُمَ عَلَى عَامَّةِ الْمُسْلِمِينَ دَمه وَإِنْ كَانَ هَذَا الْمُجِير أَدْنَاهُمْ مِثْل أَنْ يَكُون عَبْدًا أَوْ اِمْرَأَة أَوْ عَسِيفًا تَابِعًا أَوْ نَحْو ذَلِكَ فَلَا يُخْفَر ذِمَّته(2)

'முஸ்லிம்களில் ஒருவர், காபிரான ஒருவருக்கு **-அமான்-** என்ற பாதுகாப்பு உத்தராவாதம் வழங்கி இருப்பின், ஏனைய முஸ்லிம்கள் மீதும் அவரின் இரத்தம் ஹராமாகும். பாதுகாப்பு வழங்கும் இவர் இவர்களில் கீழ் நிலைமனிதராக இருப்பினும் சரியே! உதாணமாக அடிமையான ஆண், பெண், அல்லது தொழிலாளி, மற்றும் இவர்களைப் போன்றார் எக்காரணம் கொண்டு இவர்களின் பாதுகாப்பை முறித்துக் கொள்ள முடியாது'' (2) என விளக்கியுள்ளார்கள்.

நபிகள் நாயகத்தின் தோழர்கள் பிறமதத்தவரோடு செய்து கொண்ட ஒப்பந்தங்களை சரிவரிப்பேணுவதற்கு நபிகள் நாயகத்தின் வழிமுறையும், மற்றும் இது போன்ற அறிவுரைகளும் காரணமாக அமைந்தன.

உதாரணங்கள்:

நபிகள் நாயகத்தின் ஹிஜ்ரத்தின் போது குரைஷயர்களின் பெறுமதிவாய்ந்த பரிசைப் தனதாக்கிக் கொள்வதற்காக அவர்களைக் தை செய்து, குரைஷியரின் சன்மாணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நபியை இடை மறிக்க வந்த சுராகா பின் மாலிக் அவர்கள் தன்னால் முடியாமல் போவதற்கு அல்லாஹ்வின் நேரடியான உதவிதான் என்பதை விளங்கிய பின்னால், அவர் இஸ்தலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுமக்கா திரும்பினார்.

பிற்காலத்தில் தான் நபியிடம் வருவதாக இருந்தால் அதற்கான பாதுகாப்பு உத்தரவாத மடலை வேண்டினார். அவர் இது பற்றிக் குறிப்பிடும்:

فَسَأَلْتُهُ أَنْ يَكْتُبَ لِي كِتَابَ أَمْنٍ فَأَمَرَ عَامِرَ بْنَ فُهَيْرَةَ فَكَتَبَ فِي رُقْعَةٍ مِنْ أَدِيمٍ ثُمَّ مَضَى رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ (3)

*நான் அவரிடம் (நபியிடம்) பாதுகாப்பு கடிதத்தை எழுதித்தரும்படி வேண்டிக் கொண்டிருக்கின்றேன். அப்போது அவர்கள், ஆமிர் பின் ஃபுஹைராவிடம் பதனிடப்பட்ட ஒருதோல் துண்டில் எழுதும்படி பணித்தார்கள். பின்னர் அவர்கள் செல்ல வேண்டிய (மதீனாவிற்கு) சென்றுவிட்டார்கள். (3) .*

போர் நடந்து கொண்டிருக்கின்றவேளையில் எதிரிணியில் உள்ளவர் முஸ்லிம்கள் ஒப்பதந்தம் செய்துகொண்ட அணியில் ஒதுங்கிக் கொள்கின்றபோது ஒப்பந்தம் செய்துள்ள சமூகத்தில் அவர்கள் புகலிடம் கோரிவாழ்வதால் அவர்களைத்தேடிச் சென்று கொலை செய்வதை அல்குர்ஆன் தடை செய்கின்றது. (4)

*உங்களுக்கும், நீங்கள் ஒப்பந்தம் செய்து கொ்டீர்களே அந்த சமூகத்திற்கும் இடையில் ஒப்பந்தம் அமுலில் இருக்கின்ற போது அவர்கள் பக்கம் அவர்கள் ஒதுங்கிக் கொண்டாலே தவிர (அவர்களைக் கொலை செய்யாதீர்கள்) என அல்குர்ஆன் கட்டளையிடுகின்றது.*

---------------

1– سنن أبي داود رقم الحديث: 2371 ، **بَاب فِي السَّرِيَّةِ تَرُدُّ عَلَى أَهْلِ الْعَسْكَرِ** 2– عون المعبود شرح سنن أبي داود – (6 / 195)

**–3– أخرجه البخاري : برقم:3616، باب هجرة النبي صلى الله عليهوسلم، وأصحابه** 4– النساء : 90 .

உமைய்யா பின் ஸ.்.ப்வான் என்பவர் முஹம்மத் நபியின் எதிரியாவார். அவர் தனது முஸ்லிம் நண்பரான ஸ.்.த் பின் முஆத் என்பவரிடம் மதீனாவில் தங்கி சிரியா செல்வார். ஸ.்.தும் மக்கா சென்றால் அவரிடம் தங்கும் வழக்கம் உடையோராக இருந்தனர். (1)

இந்த நடைமுறையை மக்கா காபிர்களால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களோ, முஸ்லிம் அல்லாத மக்காவாழ் மக்களோ எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. அந்த வழிமுறையை மீறும் வழக்கம் அந்த மக்களிடம் காணப்படவும் இல்லை.

வஹ்ஷி என்பவர் இஸ்லாத்தை ஏற்பதற்காக வந்த போது தூதுக்குழு ஒன்றுடன்தான் வந்தார். தூதுக்குழுவினரை கண்ணியமாக நடத்தும் வழமை இஸ்லாமிய பண்பாட்டில் உள்ளது என்றும், மோசடி நிகழ்வுகள் எதுவும் நடை பெறாது என்றும் அவரிடம் கூறப்பட்ட பின் அவர் மதீனாவை நோக்கி புறப்படுகின்றார் என்பது முன்னர் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வழமை இஸ்லாத்திற்கு முற்பட்ட காலமக்களிடம் வழ்கில் இருந்து வந்துள்ளது. இஸ்லாம் அதை சிறப்பாக நடைமுறைப்படுத்தியது என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. இது ஐக்கியநாடுகள் சபையின் உருவாக்கத்தின் பின்னர் தோன்றி உரிமைகள், ஒப்பந்தக் கோட்பாடுகளை விட சிறப்பம் பெற்றது என்பதை மறுக்க முடியாது.

-----------------------------

1- ஸஹீஹ் முஸ்லிம். பாடம்: இஸ்லாத்தில் நபித்து முன்னறிவிப்புக்கள். இலக்கம்: 3360. ஸஹீஹ் முஸ்லம். பாடம்: நபி (ஸல்) அவர்கள் யாரைக் கொலை செய்வதாக அறிவித்தார்கள். இலக்கம்: 3656

## முஹம்மத் பின் ஹஸன் அஷ்ஷைபானி வாழ்க்கை குறிப்பு.

இஸ்லாமிய சர்வதேச உறவுகளின் தந்தை எனப் பெயர் பெற்ற அறிஞர் இமாம் முஹம்மத் பின் ஷைபானி (ரஹ்) அவர்கள் இந்த தலைப்புடன் நேரடியாக தொடர்புபடுவதால் அவரர் வாழ்வியல் குறிப்பு பற்றிய சுருக்கமானதொரு பார்வை இங்கு தரப்படுகின்றது.

**பெயர்:** முஹம்மத் பின் அல்ஹஸன் **ஃபர்கத்** அஷ்ஷைபானி (ரஹ்) அவர்கள்.

**பிணைப் பெயர்:** அபூஅப்தில்லாஹ்

**பிறப்பு:** வாஸித் மாகாணத்தில் ஹிஜ்ரி: 132-ல் பிறந்தார். கூஃபாவில் வாழ்ந்தார். ஹிஜ்ரி :187-ல் மரமானார். ஷைபான் கோத்திர அடிமைகளில் ஒருவராக விளங்கியதால் ஷைபானி என்ற இணைப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றார்.

### வாழ்வியல் பற்றி

இவர் ஆரம்ப காலத்தில் இமாம் அபூஹனீஃபா அவர்களிடம் பாடம் படித்தார். பிற்காலத்தில் இமாம் மாலிக் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்.

**இவரை** الفقيهமார்க்க சட்டவல்லுனர், صاحب الرأي கருத்தின்- பகுத்தறிவின் அடிப்படையில் கருத்துக் கூறுபவர், போன்ற பெயர்கள் கொண்டு அழைக்கின்றனர்

ஹதீஸ் துறையில் முழு அளவிலான அறிவற்றவர் என்ற விமர்சனம் ஹதீஸ் கலை சார்ந்த அறிஞர்களால் இவர்பற்றி முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்த நூல் பற்றி ஆய்வை மேற் கொண்ட உஸ்மான் ஜும்ஆ ளமீறிய்யா ஆய்வாளர்கள் அறிஞர் ஜும்ஆ ளமீறிய்யா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

لقد استقى الإمام محمد مادة كتابه من الآثار والأخبار من علماء عصره فقهاء ومحدثين ، وكانت هذه المادة الأساس الذي أقام عليه محمد عمله المبتكر الرائع الذي يشهد له بغزارة العلم وعمق التفكير ، وشمول النظرة ، ودقة التفصيل والتبويب والتفريع. "

وهذا كله يعلي من شأن هذا الكتاب وقيمته ، فهو بحق أول كتاب في القانون الدولي العام والخاص في العالم كله ، وهذا يضع تاج فخار على هامة الإمام محمد ، ويجعله رائد القانون الدولي ، قبل أن يتفطن علماء القانون الوضعي إلى أهمية هذا الفرع من القانون والكتابة فيه ، مما جعلهم يلتقون على إنشاء جمعية دولية باسم ( جمعية الشيباني للقانون الدولي) في (غوتنجن) بألمانيا ، وقد انتُخب لرئاستها آنذاك (1955م) الفقيه المصري الدكتور عبد الحميد بدوي ، وتهدف هذه الجمعية إلى التعريف بالشيباني وإظهار آرائه ونشر مؤلفاته المتعلقة بأحكام القانون الدولي الإسلامي. ثم أعاد تنظيم هذه الجمعية المستشرق العراقي الصليبي مجيد خدوري ، الذي أخرج كتاب( السير الكبير) في طبعة جديدة ، وهو مأخوذ من كتاب (الأصل ... (للإمام محمد ، وهو يختلف عن كتاب ( السير الكبير) الذي وضعه مستقلاً بهذا الاسموشرحه السرخسي ، وهذا يسلمنا إلى بيان شروح وطبعات الكتاب واللغات التي نقل إليها.

மனித சட்டங்கள் பற்றிய ஆய்வாளர்களுக்கு முன்பாகவே மேற்படி நூல் பற்றிய விரிவான ஆய்வில் ஜேர்மன் கோட்டேஜேனில் கி.பி. 1955 ( جمعية الشيباني للقانون الدولي) என்ற பெயரில் அமைக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் சர்வதேச இஸ்லாமிய உறவுகள் பற்றிய ஆய்வு காலத்தால் முந்தியது என்பது புலனாகின்றது.

------------

1) مجلة البيان – (14 / 33)

சர்வதேச உறவுகளின் தந்தை என முஸ்லிம்களால் போற்றப்படுகின்றார் இதற்கான காரணத்தை ஜும்ஆ ளமீரிய்யா மேலும் விளக்குகின்ற போது பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

كان الإمام محمد بن الحسن أول من أفرد للعلاقات الدولية في الإسلام مؤلفات خاصة يتناول فيها أحكام الجهاد والحرب ، وأحكام الصلح والمعاهدات ، وأحكام الأمان ، وإرسال السفراء والمبعوثين ، وآثار قيام الحرب ، وسياسة المسلمين في تنظيم الحرب ، وما يجوز وما لا يجوز في ذلك كله ... الخ . وله في هذا كتابان : أحدهما (السير الصغير) الذي كتبه أولاً ، وقد رواه عن أبي يوسف وقرأه عليه توثقاً من النص وصحة نسبة الرأي ، والثاني ( السير الكبير) وهو أوسع من الأول ، كما أنه من آخر كتب الإمام محمد تأليفاً ، وفيه إفاضة وشرح أكثر وأوسع كما يظهر من عنوان الكتابين ومن مادتهما من خلال الشروح التي وصلتنا وفي هذه الكلمة التعريفية بالكتاب ، نخص فيها كتاب (السير الكبير) ومعه الشرح الممتع القيم الذي وضعه عليه شمس الأئمة السرخسي المتوفى في القرن الخامس الهجري ما بين (483–490هـ

அந்த நூலின் பெயர் ஸியர் என வந்ததற்கான காரணத்தை விளக்குகின்ற அறிஞர் ஜும்ஆ ளமீறிய்யா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**كان الاسم الذي أطلقه المسلمون في بداية حركة التدوين في الفقه الإسلامي على دراستهم التي تناولت موقف الإسلام من السلم والحرب والحياد ، وكل ما يتعلق بأحكام الجهاد ومعاملة غير المسلمين هو ( السير. ( ( السير) جمع ( سيرة ) وتعني السَّيْر والسلوك ، ومما يؤيد ذلك عن رسول الله –صلى الله عليه وسلم– ، مثل قوله – بعد أن دفع اللواء لأحد القواد – : ... ( فقاتلوا من كفر بالله ، ولا تغلّوا ولا تغدروا ، ولا تمثلوا ، ولا تقتلوا وليداً ولا امرأة، ... فهذا عهد الله وسيرة نبيه فيكم) رواه مسلم وغيره ، أو ما يسمى اليوم (بالقانون الدولي) كان منذ عهد أبي حنيفة الذي عرف أنه أول من استعمل مصطلح ( سيرة) لتمييز مجموعة دروسه التي كان يلقيها عن الإسلام في الحرب والسلم ، ووصلت هذه الدروس منقحة على يد تلاميذه في كتابَيْ ( السير الصغير ) و ( السير الكبير) لمحمد بن الحسن الشيباني ، و ( الرد على سير الأوزاعي) لأبي يوسف ،كما أن الإمام الشافعي – رحمه الله – يشير إلى ( سير الواقدي ) في كتابه ( الأم. ( ومن ثم فإنه يبدو أن كلمة ( السير) قد صارت مصطلحاً فنياً يشيع استعماله بين الفقهاء في مختلف العصور ، وقد نص السَّرَخْسِي على هذا الفهم ، فقال ف( )المبسوط ) – وهو يشرح كتاب ( السير الصغير) للإمام محمد :( اعلم أن السير جمع سيرة ، وبه سمي هذا الكتاب ، لأنه بين فيه سيرة المسلمين في المعاملة مع المشركين من أهل الحرب ، ومع أهل العهد منهم من المستأمنين ، وأهل الذمة ،ومع المرتدين الذين هم أخبث الكفار بالإنكار بعد الإقرار ، ومع أهل البغي الذينحالهم دون حال المشركين ، وإن كانوا جاهلين ، وفي التأويل مبطلين " (المبسوط )**

## *முஹம்மத் பின் ஹஸன் அஷ்ஷைபானி அவர்களின்* **நூல்கள்.**

இமாம் அஷ்ஷைபானி அவர்கள் பல நூல்களை தந்துள்ளார்கள். அந்தவகையில்:

1- الفروع –2 الآثار

3– الجامع الكبير

4– الجامع الصغير

5– السير الكبير

6- الحجة على أهل المدينة

7– السير الصغير

8– **« الأصل » أو « المبسوط » ، وهو من أول** تصانيفه **(1)**

---

**1- عثمان جمعة ضميرية مجلة البيان (14 / 33) الإمام محمد بن الحسن الشيباني وكتابه " السِّيَرُ الكبير**

## டாக்டர்: முஹம்மத் ஹமீதல்லாஹ் வாழ்க்கை குறிப்பு

கலாநிதி முஹம்மத் ஹமீதுல்லாஹ் இந்தியா ஹைதர் ஆபாத் டக்கனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பாரீஸ் நகரில் 1935 ம் ஆண்டு கலாநிதிப் பட்டம் பெற்றார். இஸ்தன்பூல், பாரீஸ், மற்றும் பல நாடுகளில் முதுநிலை விரிவுரையாளர்களில் ஒருவராகக் கடமையாற்றினார்.

இவர் உஸ்மானியப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய புராதனங்கள் பற்றிய ஆய்வில் அதிகம் ஈடுபாடுகாட்டினார். கண்களுக்கு குளிர்ச்சி தரும் பல நூல்களை ஆளமான ஆய்விற்கு உட்படுத்தி, அதில் இடம் பெறும் தவறுகைளச் சரி செய்தும், செய்திகளை உறுதி செய்தும் பல பணிகள் செய்து, பல தூசிபிடித்துக் கிடந்த பல நூல்களை வெளிக் கொண்ர்ந்தார்.

இவரது நூல்கள் பல பிரான்ஸ், ஆங்கிலம், உர்து ஆகிய மொழிகளுக்கு மொழியாக்கம் செய்யபட்டுள்ளது. இரவது ஆய்வுகள் பல காலாண்டு சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன.

"معارف" ( أعظم كره ، الهند ) ، و"تحقيقات علميه" ( الجامعة العثمانية ، حيدرآباد ، الهند )، و"مجلة معهد المخطوطات العربية " ( جامعة الدول العربية )، و"مجلة الفكر الإسلامي" ( بيروت )، (1)

போன்ற கலைககளஞ்சிய ஆய்வுகளில் வெளிவற்துள்ளன. இவர் விட்டுச் சென்ற சொத்துக்களில்

"مجموعة الوثائق السياسية للعهد النبوي والخلافة الراشدة"، "القانون الدولي في الإسلام"، "دولة الإسلام والعالم"، وتحقيق: "كتاب المبتدأ والمبعث والمعاد" من سيرة ابن إسحاق، و" أنساب الأشراف" للبلاذري ( الجزء الأول )، و" المحبر" لابن حبيب، ..

போன்ற ஆய்வு நூல்கள் முஸ்லிம் உலகில் மிகப் பிரசித்தி பெற்றவையாகும் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

*சர்வதேச உறவுகள் பற்றிய தகவல்கள் பின்வரும் நூல்கள்களில் காணப்படுகின்றன.*

أحكام أهل الذمة لابن القيم

السياسة الشرعية لابن تيمية

النظام الدولي بين الجديد بين الواقع الحالي والتصور الإسلامي - ياسر أبو شبانة

---

1- أرشيف ملتقى أهل الحديث – 3 – (84 / 128)

## முடிவுரை

இஸ்லாம் அனைத்துக்காலத்திற்குப் பொருத்தமான தீர்வுத்திட்டங்களை முன்வைத்துள்ள அற்புமார்க்கமாகும். அதில் காணப்படும் வழிமுறைகள் பற்றி அறியாதவர்கள், அல்லது இஸ்லாம் பற்றிய காள்ப்புணர்ச்சியில் இருப்போர், இஸ்லாத்தின் மீது வேண்டுமென்றே ஆதாரமற்ற விமரிசனங்களை வாரி இறைப்போர் போன்றவர்களால் இஸ்லாத்தின் சர்வதேசக் கோட்பாடு பற்றிய தவறான பிரச்சாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

மனிதர்களைப் பிரதானப்படுத்தி உலகில் மதங்களாக அறிமுகமான யூதமதம், கிரிஸ்தவம், மற்றும் மனித சிந்தனையில் உதித்த சித்தாந்தக் கோட்பாடுகள் உள்ளடக்கிய ஹிந்து மதம், இஸங்கள் போன்றவைகளால் முன்வைக்கப்பட்டுள்ள குறைபாடுள்ள வழிமுறைகளைக் கண்டு இஸ்லாத்தை அவற்றுடன் ஒப்பிட்டு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இஸ்லாமிய மார்க்கத்தின் மீது சுமத்த முன்வந்தனர்.

அவர்களின் குற்றச்சாட்டுகள் எந்த வகையிலும் நியாயமற்றது என்பது பற்றி சுருக்கமாக இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் அரபு நூல்கள் முழுமையாக ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளதுடன், பெரும்பகுதி மொழியாக்கமும் செய்யப்பட்டுள்ளது. இந்த முயற்சி மிகச் சிரமம் நிறைந்த சிறிய முயற்சியாகும்.

ஏக இறைவனாகிய மனிதர்களின் இரட்சகனானிய அல்லாஹ் இதற்கு அருளும், நட்பாக்கியமும் செய்வானாக எனப் பிரார்த்தித்தவனாக…

المصادر والمراجع :


1- القرآن الكريم
2- محمد بن جرير الطبري : جامع البيان في تأويل آي القرآن
3- أبو عبدالله ، محمد بن إسماعيل بن إبراهيم بن المغيرة : الصحيح المسند المسى (ب)صحيح البخاري
4- أبو الحسن القشيري النيسابوري، مسلم بن الحجاج : صحيح مسلم
5- أبو داود سليمان بن الأشعث بن شداد بن عمرو الأزدي السجستاني ، سنن أبي داود
6- العظيم آبادي، شمس الحق : عون المعبود شرح سنن أبي داود
7- عز الدين أبو الحسن علي بن محمد بن عبد الكريم الجزري المعروف (ب )ابن الأثير ، النهاية في غريب الحديث والأثر .

الناشر : المكتبة العلمية – بيروت ، 1399هـ - -

8- الجامعة الإسلامية ، مجلة الجامعة الإسلامية بالمدينة المنورة ، المملكة العربية السعودية .
9- الشحوذ ، علي بن نائف:الحضارة الإسلامية بين أصالة الماضي وآمال المستقبل : المكتبة الشاملة .
10- الندوي ، أبو الحسن على . ماذا خسر العالم بانحطاط المسلمين . دارالغد الجديد للنشر والتوزيع .مصر.
11- المكتبة الشاملة ، أرشيف ملتقى أهل الحديث
12- قطب ، محمد : مذاهب فكرية معاصرة .مطبعة دار الشرق . الطبعة الرابعة – 1988 م
13- قطب ، محمد : شبهات حول الإسلام
14- ابن حجر العسقلاني ، فتح الباري شرح صحيح البخاري
15- ابن الأثير : أبو السعادات المبارك بن محمد الجزري ، 1979م تحقيق : طاهر أحمد الزاوى – محمود محمد الطناحي (من المكتبة الشاملة)
16- عارف خليل أبو عيد : العلاقات الدولية في الفقه الإسلامي ، دار النفائس للنشر والتوزيع – الأردن
17- توفيق بن عبد العزيز السديري : الإسلام والدستور ((1 / 14)) من المكتبة الشاملة .
18- عثمان جمعة ضميرية : " لإمام محمد بن الحسن الشيباني وكتابه " السِّيَرُ الكبير" مجلة البيان
19- ابن الأثير ، أبو السعادات المبارك بن محمد الجزري ، **الكامل في التاريخ**
20- مجلة مجمع الفقه الإسلامي
21- فايزة إسماعيل أكبر، الدكتورة : الزط وموقعهم في التاريخ الإسلامي

இணையம்:

22- http://www.neelwafurat.com/itempage.aspx?id=lbb135582-95650&search=books


**eBook by: www.islamkalvi.com**